பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 தை 20 வியாழக்கிழமை (02.02.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :67

## அரச ஒட்டுப்படைகளின் கெடுபிடிகள் குறையாவிட்டால் பதிலடித் தாக்குதல்

### யாழ்.மாவட்ட பொங்கியெழும் மக்கள் படை எச்சரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.2

''அரசபடைகளும், ஒட்டுக்குழுக்களும் தமிழ் மக்கள் விரோதச் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்திக்கொள்ளவேண்டும். இல்லையெனில் அரச படைகளினதும் ஒட்டுக்குழுக்களினதும் வன்முறை ஒடுக்குதல்களிலிருந்து தமிழ் மக்களைக் காப்பதற்காக எதிர் நடவடிக்கைகளை எடுக்க நாம் தயங்கமாட்டோம்''

- இவ்வாறு முன்னெச்சரிக்கை விடுத்திருக்கிறது யாழ்.மாவட்ட பொங்கியெழும் மக்கள் படை.

நேற்று இது தொடர்பாக அப்படை அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சிங்களப்படைகளே! ஒட்டுக்குழுக்களே!!

தமிழ் மக்களது இயல்புவாழ்க்கைக்கு

(16ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் திடீர் நடமாட்டம்: வடமராட்சியில் பெரும் பீதி!

கரவெட்டி,பெப்.2

வடமராட்சியின் சில பகுதிகளில் நேற்று மாலை காணப்பட்ட படையினரின் அதிகரித்த நடமாட்டம் மக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியதாக அங்கிருந்து கிடைத்த செய்தி கள் தெரிவித்தன.

குறிப்பாக, நெல்லியடி, மாலுசந்தி, நவிண்டில், வதிரிச்சந்தி ஆகியபகுதிகளுக்கு திடீரென வந்து சேர்ந்த பெரும் எண்ணிக்கையான படையினர் வீதிரோந்தைத் தீவிரப்படுத்தியதுடன், வீதியால் பயணித்தவர்களை கடும்

(16ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கூட்டமைப்பினர் நாடாளுமன்றில்

# நேற்று வெளிநடப்பு; இன்று ஆர்ப்பாட்டம்

## கடத்தப்பட்ட புனர்வாழ்வுக்கழக ஊழியர்கள் விடுவிக்கப்படும்வரை போராட்டம் தொடரும்

கொழும்பு, பெப்ரவரி 02

**அரச படையினருடன் சேர்ந்து இயங்கும் ஒட்டுப்படையினர் எனக் கருதப்படுவோரால் கடந்த திங்கட்கிழமை கடத்திச் செல்லப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த சமூக சேவகர்களை விடுதலை செய்யக்கோரியும், படையினர் வடக்கு - கிழக்கில் தொடர்ந்து மேற்கொண்டு வரும் அட்டகாசங்களைக் கண்டித்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்றத்தில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.**

**அதேபோல் இன்று ஆர்ப்பாட்டம் செய்து நாடாளுமன்ற நடவடிக்கைகளை நடக்கவிடாமல் தடுப்பதற்கும் அவர்கள் தீர்மானித்துள்ளனர்; இப்போராட்டத்தை இதன் பின்னர் தொடர்ந்து மேற்கொள்ளவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.**

இன்றைய ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி மற்றும் மேலக மக்கள் முன்னணி ஆகிய தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணையவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடத்திச் செல்லப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சமூக சேவையாளர்கள் விடு

(16ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்டவர்களில் இருவர் விடுவிப்பு

கொழும்பு,பெப்.2

கடந்த திங்கட்கிழமை வெலிகந்தை இராணுவ சோதனை நிலைக்கு அருகில் வைத்து வெள்ளை வானில் வந்த இனம்தெரியாதோரால் இரு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பத்து சமூக சேவகர்கள் கடத்திச் செல்லப்பட்டனர். அவர்களில் இரண்டு பெண்கள் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பிலிருந்து வவுனியாவுக்கு விசேட பயிற்சி பெறுவதற்காக வாகனமொன்றில் சென்று கொண்டிருந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பதின்னான்கு ஊழியர்களும், வாகனச் சாரதியும் வெலிகந்தை காவல் நிலையத்திற்குப் பக்கத்தில் வைத்து முதலில் கடத்தப்பட்டனர்.

அவர்களுள் பெண்ணொருவர் உட்பட ஐந்து கணக்காளர்களைத் தடுத்துவைத்த

(16ஆம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வுக்கழக ஊழியர் கடத்தல்: புனையப்பட்ட கதையன்றி வேறில்லை!

### ஜனாதிபதியின் சகோதரர் கோட்டபாய கூறுகின்றார்

தமிழர் புனர்வாழ்வுக்கழக ஊழியர்கள் கடத்தப்பட்டதாகக் கூறப்படுவது முற்றிலும் திரிக்கப்பட்ட - புனையப்பட்ட - கதை எனத் தோன்றுகின்றது. அமைதி முயற்சிகளுக்கு முன்னர் அரசுத் தரப்பிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையாக இதனை சர்வதேச சமூகத்தின் முன்காட்ட எடுக்கப்பட்ட எத்தனமாகவே இது படுகின்றது.

- இவ்வாறு கூறியிருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோட்ட

(16ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சில் பங்குபற்றும் அரசின் குழுவுக்கு 7, 8ஆம் திகதி விசேட பயிற்சிப் பட்டறை

### அன்ரன் பாலசிங்கம் அணியுடன் கருத்துமோதலுக்கு தயாரிப்பு மும்முரம்

கொழும்பு,பெப்.2

ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் உத்தேச சமாதானப் பேச்சுகளில் பங்குபற்றவிருக்கும் இலங்கை அரச தரப்புக்குழு, அப்பேச்சுகளில் சிறப்பாகவும், நுணுக்கமாகவும் தனது திறமையை வெளிப்படுத்துவதற்காக அக்குழுவுக்கு அதற்கான விசேட தயாரிப்புப் பயிற்சி வழங்கப்படவிருக்கின்றது.

இந்த நோக்கத்திற்காக அக்குழுவினருக்கு எதிர்வரும் 7, 8ஆம் திகதிகளில் விசேட பயிற்சிப்பட்டறை (Workshop) நடத்தப்படவிருக்கின்றது.

இந்தப் பயிற்சிப் பட்டறையை நடத்துவதற்காக பத்து சிரேஷ்ட சட்ட நிபுணர்கள் - பெரும்பாலும் ஜனாதிபதி சட்டத்தரணிகள் -

(16ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வெலிகந்தைப் பகுதியில் விசாரணை

கொழும்பு, பெப். 2

வெலிகந்தைப் பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சமூக சேவையாளர்கள் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இவ்விவகாரம் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்ட் கூறியதாவது:-

முதல் சம்பவம் ஞாயிறன்று நடைபெற்றதாக எங்களுக்குக் கூறப்பட்டுள்ளது. தமிழர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## நிமல், ஜெயராஜ், ப்ாயிஸ் முஸ்தபாவுடன் அரசுக் குழுவில் கடற்படைத் தளபதியும்

கொழும்பு, பெப்.2

ஜெனீவாவில் புலிகளுடன் நடைபெறவிருக்கும் பேச்சுகளில் பங்குபற்றுகின்ற அரசுத் தரப்புக் குழுவுக்குப் பெரும்பாலும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமைதாங்கக் கூடும் எனத் தெரிகிறது.

அவரோடு அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயும் அமைச்சர் ரோஹித்த போகொல்லாகமவும் குழுவில் இடம் பெறுவார்கள் எனத் தெரியவருகிறது.

முஸ்லிம் தரப்புப் பிரதிநிதி என்ற வகையிலும் சட்ட நிபுணர் என்ற ரீதியிலும், இப்பேச்சுகளில் அரச பிரதிநிதியாக ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா இடம் பெறுகின்றார்.

அதேவேளை, படை அதிகாரி என்ற முறையில் கடற்படையின் தளபதி ரியர் அட்மிரல் வஸந்த கரன்னகொட இப்பேச்சுகளில் அரசின் ஒரு பிரதிநிதியாகப் பங்குபற்றுவார் என ஒரு தகவல் தெரிவித்தது.

இதேசமயம், இந்தப் பேச்சுகளில் அரசுத்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவும் மஹிந்தவும் நேற்றிரவு அலரிமாளிகைக் கூட்டத்தில் சந்திப்பு

கொழும்பு, பெப். 02

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் நேற்று ஒரே மேடையில் அமர்ந்து அளவளாவிக் கொண்டனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்களுக்கான கூட்டம் நேற்றிரவு ஜனாதிபதியின் அலரி மாளிகையில் இடம் பெற்றது.

அக்கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவியான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றிரவு 7.30 [illegible] கைக்கு வந்துசேர்ந்தார்.

அந்நேரம் அலரிமாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அலரி

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# படையினரால் பொதுமக்கள் துன்புறுத்தப்படுவதாக முறைப்பாடு கிடைப்பின் உடனடி நடவடிக்கையாம்!

## பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.2

குடாநாட்டில் சேவையிலுள்ள படையினரோ அல்லது பொலீஸாரோ மக்களைத் துன்புறுத்துவதாக முறைப்பாடு செய்யப்பட்டால் அது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு யாழ்.மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திர சிறி, தம்மைச் சந்தித்த குடாநாட்டில் இயங்கும் மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் உறுதியளித்துள்ளார் என கொழும்பிலுள்ள பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறிக்கும் யாழ்.மாவட்டத்தில் இயங்கும் மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த திங்கட்கிழமை பலாலி படைத் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்புக் குறித்து பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் பத்திரிகை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே மேஜர் ஜெனரல் சந்திர சிறி இந்த உறுதி மொழியை வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

குடாநாட்டில் தேடுதல் மற்றும் வெடிபொருள்களை இனங்காண்பதற்கான துப்புரவுப் பணிகள் இடம்பெறும்போது பொலீஸாரின் பிரசன்னம் இருக்கும்.

சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டால் அது தொடர்பாக - உடனடியாக சம்பந்தப்பட்டவரின் நெருங்கிய உறவினர்களுக்கு அறிவிக்கப்படும்.

வெடிபொருள்கள் போன்ற சந்தேகத்திற்கிடமான பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அது தொடர்பாக அப்பகுதி கிராம சேவையாளருக்கு அறிவிக்கப்படும். அத்தகைய பொருள்கள் வீடுகளில் இருந்து கைப்பற்றப்பட்டால் கைப்பற்றப்பட்ட பொருள்கள் தொடர்பாக முழுவிவரங்களும் பட்டியல் இடப்பட்டு அதில் அந்த வீட்டு உரிமையாளரிடம் கையொப்பம் பெறப்படும்.

மக்கள் துன்புறுத்தப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டால் அது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். அது தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட பிரதிநிதிகள், அவசர முறைப்பாட்டுப் பிரிவுக்கு 021 222 9693, 021 222 2001, 021 222 2271 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் மூலம் தொடர்புகொண்டு முறைப்பாடுகளைச் செய்யலாம்.

நோய் வாய்ப்பட்டவர்களை இரவு வேளைகளில் சோதனைச் சாவடிகள் ஊடாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கும் இந்தச் சந்திப்பில் இணக்கம் காணப்பட்டது. இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் அத்தகைய சம்பவம் இடம்பெற்றால் மேற்படி தொலைபேசி இலக்கங்களுடன் படைத் தரப்புக்குத் தெரிவித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

படையினரின் வீதி ரோந்து நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெறுவதால் குடாநாட்டில் குற்றச் செயல்கள் கணிசமான அளவு குறைந்துள்ளன. இதனால் பொது மக்களுக்கு எந்தவிதமான அசௌகரியங்களும் ஏற்படாத வகையில் ரோந்து நடவடிக்கை இடம்பெறும்.

மேற்படி சந்திப்புப் போன்று மாதத்தில் இரு தடவைகள் இத்தகைய சந்திப்புகள் இடம் பெறும். அந்தவேளை இந்தப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பாக எடுத்துக் கூறலாம்.

இந்தச் சந்திப்பில் கட்டளைத் தளபதியுடன், காங்கேசன்துறை சிரேஷ்ட பொலீஸ் அதிபர், யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி, மனித உரிமைகள் சட்டத்தரணிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர், யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர், யாழ்.மாவட்ட சிறுவர் நலச் சங்கத் தலைவர், சட்டத்தரணிகள் சங்கப் பிரதிநிதிகள், கியூடெக், ஹரித்தாஸ் நிறுவனப் பிரதிநிதிகள், நோர்வே அகதிகள் கழகம், சர்வதேச மனித உரிமைகள் ஆணைக் குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் உட்பட பல அமைப்புக்களின் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர் என பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைச் செயலகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - இந்தச் சந்திப்புத் தொடர்பான செய்தி கடந்த செவ்வாய்க்கிழமை உதயனில் தலைப்புச் செய்தியாக வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

## பிரதம பேராயரின் ஆணையராக வண. ஆனல்ட் நியமனம்



யாழ்ப்பாணம்பெப்.2

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். ஆதீனத்தின் பிரதம பேராயரின் ஆணையாளராக வண எஸ்.சி. ஆனல்ட் நியமிக்கப்பட்டுள்ளார்.

24.01.2006 தொடக்கம் நடைமுறைக்கு வரும் பிரதம பேராயர் கலாநிதி சுகர்ந்தரால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (எ)

## திறந்த பல்கலை பரீட்சைகள்

யாழ்.பிராந்திய திறந்த பல்கலைக்கழகத்தின் சிறு வணிக முகாமைத்துவ கற்கைநெறி மாணவர்களுக்கான இறுதி ஆண்டுப் பரீட்சை எதிர்வரும் 18ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கொழும்புதலைமைக்காரியாலயத்தில் இருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய திறந்த பல்கலைக்கழக இயக்குநர் தெரிவித்தார். (எ-12)

## சைவப்புலவர் பரீட்சைக்கு தோற்றுவோருக்கு வகுப்பு

சைவப்புலவர், சித்தாந்தபண்டிதர் ஆகிய பரீட்சைகளுக்குத் தோற்றுவோருக்கென அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினால் நடத்தப்படும் வகுப்புகள் நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என்று சங்கத்தின் தேர்வுச் செயலாளர் கலாநிதி வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (எ)

# வவுனியாவில் இன்று ஹர்த்தால்! அரசுக்கு எதிராகப் பேரணி!!

வவுனியா,பெப்.2

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பொது மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இராணுவ அடாவடித்தன நடவடிக்கைகளைக் கண்டித்து வவுனியா மாவட்டத்தில் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது. அரசின் செயற்பாடுகளுக்கு எதிராகப் பேரணி ஒன்றும் நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்ட வர்த்தக சங்கத்தினர் இதற்கான அழைப்பை விடுத்துள்ளனர்.

அண்மைய நாள்களாக வடக்கு - கிழக்கு மாகாணத்தின் சகல பிரதேசங்களிலும் பொது மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இராணுவத்தினரது இச்செயலைக் கண்டிக்கும் வகையில் இன்று வியாழக்கிழமை வவுனியா மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது. அதற்கமைய சகல வியாபார நிலையங்களும் அரச மற்றும் தனியார் அலுவலகங்களும் மூடப்படுவதுடன் போக்குவரத்தையும் கட்டுப்படுத்தி தமிழ் மக்கள் ஸ்ரீலங்கா அரசிற்கு தமது எதிர்ப்பினைக் காட்டவேண்டும் என்று வர்த்தக சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

இன்று காலை 9 மணிக்கு வவுனியா மக்கள் சந்தைக்கு முன்பாகப் பேரணி ஆரம்பமாகவுள்ளது. இப்பேரணி வவுனியா செயலகத்தை சென்றடைந்ததும் ஜனாதிபதிக்கான மகஜர் வவுனியா மாவட்ட அரச அதிபரிடம் கையளிக்கப்படவுள்ளது. அத்துடன், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் மகஜர் கையளிக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-164-202)

## கிளிநொச்சியில் இன்று கண்டனப் பேரணி

கிளிநொச்சி,பெப்.2

வெலிகந்தவில் வைத்து தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் கடத்தப்பட்டதனைக் கண்டித்தும் அவர்களை விடுதலை செய்யுமாறு கோரியும் கிளிநொச்சியில் இன்று கண்டனப் பேரணி ஒன்று இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இன்று முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி சந்திரன் பூங்காவில் இருந்து இந்தக் கண்டனப் பேரணி ஆரம்பமாகும். பேரணியின் இறுதியில் பல்வேறுதரப்பினர்களுக்கும் மகஜர்கள் கையளிக்கப்படவுள்ளன. (எ-6-301-352)

# கராச்சி டெஸ்டில் இந்தியா படுதோல்வி

# சொந்த மண்ணில் பழி தீர்த்தது பாக்.!

கராச்சி,பெப்.2

இந்தியா - பாகிஸ்தான் அணிகளிற்கிடையில் கராச்சி மைதானத்தில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 341 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

22 வருடங்களின் பின்னர் தனது சொந்த மண்ணில் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றியுள்ள பாகிஸ்தான், இந்தத் தொடரை 1:0 என்ற ரீதியில் வென்றது.

பாகிஸ்தான் வேகப் பந்து வீச்சாளரான முகம்மது ஆசிப் இந்திய முன்னணித் துடுப்பாளர்களை அடுத்தடுத்து 'போல்ட்' செய்ய இன்னும் ஒரு நாள் மீதமிருக்கையிலேயே ஆட்டம் முடிவுக்கு வந்தது. யுவராஜ் சிங் தவிர இந்திய நட்சத்திரங்கள் ஜொலிக்க மறுத்ததால் பாகிஸ்தானின் வெற்றி சுலபமாகியது.

முன்னதாக, நேற்றுமுன்தினம் மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் பாகிஸ்தான் அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களை இழந்து 511 ஓட்டங்களைக் குவித்திருந்தது. ஆட்டமிழக்காமல் களத்திலிருந்த பைசால் இக்பால் (103) மற்றும் அப்துல் ரசாக் (44) ஆகியோர் நேற்றைய ஆட்டத்தை ஆரம்பித்தனர்.

ஆட்டம் ஆரம்பித்த சிறிது நேரத்தில் அப்துல் ரசாக் அரைச் சதம் அடித்தார். அவருடைய 6ஆவது அரைச் சதம் இது. பின்னர் அவர் அதிரடி ஆட்டத்தில் இறங்கினார்.

கும்ளேயின் சுழல் பந்துகள் ரசாக்கின் விளாசல்களில் பவுண்டறிகளாகவும் சிக்ஸர்களாகவும் பறந்தன. அவருக்குத் துணையாக இக்பாலும் அடித்து ஆடி இந்தியப் பந்து வீச்சாளர்களைத் துவம்சம் செய்தனர்.

டெண்டுல்கர் வீசிய ஒரு ஓவரில் இக்பால் தொடர்ந்து இரண்டு பவுண்டரிகளையும் ஒரு மிகப்பெரிய சிக்ஸரையும் விளாசினார். இவர்களின் விளாசலால் பாகிஸ்தான் அணியின் ஓட்ட வீதம் நேற்றுக் காலையில் திடீரென எகிறிற்று.

சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த இக்பால்(139) அணி 598 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது சஹீர்கானின் பந்தில் ஆட்டமிழந்தார். டெண்டுல்கர் அவரது பிடியை எடுத்தார்.

இக்பாலின் டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையில் அவர் பெறும் கன்னிச் சதம் இது. 220 பந்துகளை எதிர்கொண்டு 16 பவுண்டறிகள் ஒரு சிக்ஸருடன் 139 ஓட்டங்களைக் குவித்தார் அவர்.

தொடர்ந்து சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த அப்துல் ரசாக் சதத்தை எட்டியதும் ஆட்டத்தத்தை இடைநிறுத்தத் தீர்மானித்திருந்த பாகிஸ்தான் அணிக்கு அவர் ஏமாற்றத்தையே அளித்தார். சதத்திற்கு 10 ஓட்டங்களே வேண்டி இருக்கையில் கும்ளேயின் பந்தில் அவர் ஆட்டமிழந்தார். அப்போது அணி 599 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அத்துடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை இடைநிறுத்துவதாக பாகிஸ்தான் அறிவித்தது.

ஏற்கனவே முதல் இன்னிங்ஸில் 7 ஓட்டங்களால் முன்னிலையில் இருந்த பாகிஸ்தான் அணி, மொத்தம் 607 ஓட்டங் களைப் பெற்றால் வெற்றி என்ற இமாலய இலக்கை இந்தியாவுக்கு நிர்ணயித்தது.

அந்த இலக்கைத் துரத்த ஆரம்பித்த இந்திய அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி அளித்தார் 'ராவல் பிண்டி எக்ஸ்பிரஸ்' சொயிப் அக்தர்.

தனது முதல் ஓவரிலேயே இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாளரும் தலைவருமான ராகுல் டிராவிட்டின் விக்கெட்டை அவர் பறித்தார். தொடர்ந்து மற்றொரு வேகப் புயலான முகமட் ஆசிப் அற்புதமாகத் தனது திறமையை வெளிப்படுத்த இந்திய அணியின் விக்கெட்டுக்கள் மளமளவெனச் சரிந்தன.

சேவாக், லக்ஸ்மன், சச்சின் ஆகிய இந்திய நட்சத்திரங்களை அவர் பிடுங்கி எறிந்தார். வெறும் 74 ஓட்டங்களுக்கு முக்கிய முன்னணி நான்கு விக்கெட்டுக்களை இழந்த இந்திய அணி தட்டுத் தடுமாற ஆரம்பித்தது.

ஆனால், 5ஆவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலியும் யுவராஜ் சிங்கும் அணியைச் சரிவில் இருந்து காத்தனர். முன்னணித் துடுப்பாளர்களுக்குச் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்த பாக். பந்து வீச்சாளர்களின் பந்துகளை இளம் வீரரான யுவராஜ் சிங் எல்லைகளை நோக்கி ஓட ஓட விரட்டினார்.

இந்த ஜோடி 5ஆவது விக்கெட்டுக்காக 103 ஓட்டங்களைப் பெற்றது. நிதானமாக ஆடிக்கொண்டிருந்த கங்குலி (37) ஆட்டமிழக்க, இந்தியாவின் தோல்வி உறுதியானது. பதான், கும்ளே, சஹீர்கான் ஆகியோரும் குறுகிய இடைவெளியில் ஆட்டமிழக்க இந்தியாவின் இரண்டாவது இன்னிங்ஸ் ஒரு நாளிலும் குறைவான நேரத்தில் முடிவுக்கு வந்தது.

இந்த இடைவெளிக்குள் யுவராஜ் சிங் டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது இரண்டாவது சதத்தைப் பூர்த்தி செய்தார். அவர் 45 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது கொடுத்த சந்தர்ப்பம் ஒன்றை சல்மான் பட் தவறவிட்டார். தொடர்ந்து 97 ஓட்டங்களைப் பெறுவதற்குள் அவர் கொடுத்த மேலும் இரு சந்தர்ப்பங்களையும் பயன்படுத்த பாக். வீரர்கள் தவறிவிட்டனர்.

2004ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் செய்த இந்திய அணி டெஸ்ட் தொடரை 2:1 என்ற ரீதியில் வெற்றி கொண்டிருந்தது. இந்தத் தொடர் மூலம் பாகிஸ்தான் அணி அதற்குப் பழி தீர்த்துக் கொண்டுள்ளது.

கடைசி ஆட்டத்தின் நாயகனாக விக்கெட் காப்பாளர் கம்ரன் அக்மலும் தொடரின் நாயகனாக யுனிஸ் கானும் தெரிவுசெய்யப்பட்டனர். (ற-ரி)

## சேவைநலன் பாராட்டு விழா

யாழ்ப்பாணம்பெப்.2

வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் ந.சிவராஜாவின் சேவைநலன் பாராட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வித்தியாலயத்தின் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை உப அதிபர் மா.சண்முகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் ஆசியுரை, வாழ்த்துரை, பாராட்டுரை, விழாநாயகர் கௌரவிப்பு, நினைவுப் பரிசில் வழங்கல் என்பன இடம்பெறும். (எ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## ஒட்டுப்படைகளா? சமாதானமா? அரசு முடிவு செய்ய வேண்டிய வேளை!

"எமக்கு இப்போது தேவையானது வன்முறைகளை நிறுத்துவது என்பதுதான். வன்முறைகள் நிறுத்தப்பட்டு விட்டால் அடுத்தகட்ட அமைதிப் பேச்சுகள் நடைபெறும். ஒவ்வொரு படிநிலையாக இது நடைபெறும்.

"அமைதியான சூழ்நிலையைத்தான் நாம் விரும்புகிறோம். குறிப்பாக வடக்கு, கிழக்கில் இந்த அமைதிச் சூழ்நிலை நிலவவேண்டும். வடக்கு - கிழக்கில் எதுவிதப் படுகொலைகளும் இடம்பெறக்கூடாது."

- இப்படி திருவாய் மலர்ந்தருளியிருப்பவர் வேறு யாருமல்லர். இந்த நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷதான்.

ஜெனிவாவில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் பேச்சுகள் நடப்பதற்கான இணக்கம் எட்டப்பட்ட பின்னர் வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு கூறியிருக்கிறார்.

அவரது கருத்து வாய்மொழிகளில் - பேச்சில் - நன்றாகத்தான் இருக்கின்றது. செயலில் நடப்பதோ - யதார்த்தத்தில் நிகழ்வதோ - வேறானதாக அல்லவா உள்ளது?

ஜெனிவாவில் பேச்சு நடத்துவதற்கான இணக்கம் பற்றிய அறிவிப்பு கடந்த 25ஆம் திகதி கிளிநொச்சியில் வைத்து விடுக்கப்பட்டது.

அந்த அறிவிப்பு வெளியான கையோடே அரச படைகளுக்கு எதிரான வன்முறைகள் எதுவும் இடம்பெறக் கூடாது என்ற கடுமையான உத்தரவு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனினால் பிராந்தியத் தளபதிகளுக்கு விடுக்கப்பட்டதாகவும் செய்திகள் பிரசுரமாகின.

கடந்த ஒரு வார காலமாக அந்த உத்தரவு புலிகள் தரப்பினால் முழு அளவில் கடைப்பிடிக்கப்படுவதை கள நிலைவரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

இதேபோன்ற உத்தரவு ஒன்றை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் கூட்டுப்படைகள் மற்றும் பொலீஸின் தளகர்த்தர் என்ற முறையில் முப்படைத் தளபதிகளையும் பொலீஸ்மா அதிபரையும் அழைத்து விடுத்தார் என்று கூறப்படுகின்றது.

ஆனால், தமிழர் தரப்புக்கு எதிரான நடவடிக்கைகள், தாக்குதல்கள், வன்முறைகள் நின்றபாடில்லை; அவை தொடர்கின்றன.

தமிழர் தாயகத்தில் படையினரின் கெடுபிடிகள், அட்டகாசங்கள் குறையவில்லை. மட்டக்களப்பு வடமுனையில் புலிகளின் போராளிகள் மீது ஒட்டுப்படைகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் மேஜர் கபிலன் என்ற போராளி உயிரிழந்திருக்கின்றார்.

அதேசமயம், தமிழர் தாயகப் பிரதேசத்தில் போரினாலும், ஆழிப்பேரலை அழிவுகளினாலும் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு, புனர் நிர்மாணப் பணிகளைக் கவனித்து வந்த தொண்டு அமைப்பான தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பத்து ஊழியர்கள் கடத்தப்பட்டிருக்கின்றார்கள். அரச படைகளின் புலனாய்வுப் பிரிவுகளின் கையாள்களாக இயங்கும் ஒட்டுப்படைகளின் கைவரிசையே இது என்று சந்தேகிக்கப்படுகின்றது.

ஒருபுறம் வன்முறைகள் நிறுத்தப்படவேண்டும் என்ற தமது அவாவை ஜனாதிபதி மஹிந்த வெளிப்படுத்துகின்றார். அத்தோடு புலிகளுக்கும், தமிழர்களுக்கும் எதிரான வன்முறைகள் இடம்பெறக்கூடாது என்று தளபதிகளுக்கு அவர் உத்தரவிடுகின்றார்.

ஆனால், மறுபுறத்தில் இராணுவச் சோதனை நிலைக்கு நெருக்கமாக வைத்தே, ஒட்டுப்படையினர் என்று கருதப்படுவோரால், தமிழ் அகதிகளுக்கான தொண்டர் பணியில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்கள் ஆயுத முனையில் கூட்டாகக் கடத்தப்பட்டு காணாமல் போகின்றனர். இவற்றை நோக்கும் போது என்ன தெளிவாகின்றது?

ஒட்டுப்படைகள் மீதும் அவற்றை இயக்குகின்ற புலனாய்வு அதிகாரிகள் மீதும் தமது அதிகாரத்தைச் செலுத்த முடியாத - அவர்களைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கமுடியாத - தளகர்த்தராக ஜனாதிபதி மஹிந்த விளங்குகின்றார் என்ற முடிவுக்கே தமிழர் தரப்பு வரவேண்டியிருக்கின்றது.

தற்போதைய அமைதி முயற்சிகளுக்கான புறச்சூழலை ஏற்படுத்துவதாயின் இந்த ஒட்டுப்படைகளை அரசுத் தலைமை கட்டுப்படுத்தி,நிராயுதபாணிகளாக்கி, வடக்கு, கிழக்குக்கு வெளியே - தமிழர்தாயகத்திற்கு அப்பால் - அனுப்பவேண்டியது அத்தியாவசியமானது என்று இப்பத்தியில் பல தடவைகள் திரும்பத் திரும்பக் கூறிவந்துள்ளோம்.

அதைச் செய்வதை விடுத்து, ஒட்டுப்படைகள் தமது அராஜகத்தைப் புரிவதற்கு வசதியாக அவர்களை அரசுத் தலைமை கட்டுக்குள் வைக்காமல் திறந்துவிடுமானால், அமைதிப் பேச்சுகளுக்கான புறச்சூழல் ஏற்படாமலேயே போய்விடும். அத்தகைய நிலையில் சமாதானப் பேச்சுகள் இடம்பெறுவதும் சாத்தியமற்றதாகிவிடும்.

அந்நிலையில், ஒட்டுப்படைகளை கட்டுப்படுத்தி, அவர்களின் கைகளைக் கட்டி ஓரப்படுத்தும் வேலையை - பணியை - தாங்களே பொறுப்பெடுத்து, நிறைவேற்றிவிட்டு அதற்குப் பின்னர் அமைதிப்பேச்சுக்குத் திரும்புவது குறித்து ஆலோசிக்க வேண்டிய நிலைமைக்குத் தமிழர் தலைமை - விடுதலைப் புலிகள் அமைப்பு - தள்ளப்படும் என்பதையும் அரசுத் தலைமை உணர்வது நல்லது.

தன்னை விஞ்சி நிற்கும் ஒட்டுப்படைகளின் போக்குக்கு அரசுத்தலைமை மண்டியிடப் போகின்றதா? அல்லது அதைக் கட்டுப்படுத்தி, அமைதி முயற்சிகளுக்கான புறச் சூழலை ஏற்படுத்தும் கடப்பாட்டையும் பொறுப்பையும் நிறைவு செய்யப்போகின்றதா?

அதில்தான் அமைதி முயற்சிகளின் - சமாதான நடவடிக்கைகளின் - எதிர்காலம் தங்கியிருக்கின்றது.

ஒட்டுப் படைகளா? சமாதான முயற்சிகளா? எது தனக்கு அவசியம் என்பதை அரசுத் தலைமை தீர்மானிக்கவேண்டிய இறுதிவேளை வந்துவிட்டதாகவே தெரிகிறது.

# இராணுவ வன்முறைகளை நிறுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும்

### தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் அறிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.2

தமிழ்மக்கள் மீதான இராணுவக் கெடுபிடிகள் சமாதான முன்னெடுப்புகளுக்கு உகந்த சூழலை ஏற்படுத்தப் போவதில்லை. இத்தகைய நடவடிக்கைகள் மீண்டும் போருக்கே வழி வகுக்கும் - எனவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இராணுவ வன்முறைகளை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்து தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒருபுறம் சமாதானம் என்று அரசு கூறிக்கொண்டிருக்க, மறுபுறம் சமாதானச் செயற்பாட்டுக்குக் குந்தகம் ஏற்படுத்தும் முகமாக- அதாவது ஸ்ரீலங்கா அரசின் நிலைப்பாட்டிற்கு மாறான போக்கை- ஸ்ரீலங்கா இராணுவம் திட்டமிட்ட வகையில் மேற்கொண்டுவருவதை வன்மையாகக் கண்டிப்பதுடன் இவற்றினை இராணுவம் நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வேண்டுகின்றோம்.

இலங்கைத்தீவில் தமிழ் மக்களுக்கு நீதியானதும், நிரந்தரமானதுமான தீர்வினை ஏற்படுத்துவதற்காகச் சமாதானப் பேச்சுக்கான இடமும், இணக்கமும் காணப்பட்ட நிலையிலும் கூட ஸ்ரீலங்கா இராணுவம் தனது இராணுவ அராஜகத்தை அரங்கேற்றி வருவது தமிழ் மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் ஸ்ரீலங்கா அரசின் சமாதானப் போக்கு மீதான நம்பிக்கையை இழக்கவே செய்கின்றது என்பது கண்கூடு.

அதாவது அன்று (30.01.2006) கண்டி வீதியில் பயணஞ்செய்த மக்கள் மீது இராணுவம் பல கெடுபிடிகளை மேற்கொண்டதும், 28.01.2006 அன்று ஊர்காவற்துறையில் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டதும் ஸ்ரீலங்கா இராணுவத்தினது தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை குறையப்போவதில்லை என்பதனையே வெளிப்படுத்துகின்றன.

பேச்சுக்கான புறநிலை, அதாவது எமது மக்களின் வாழ்வில் ஓர் இயல்பு நிலையைத் தோற்றுவிக்க வேண்டிய நிலையில் மாறாக ஸ்ரீலங்கா இராணுவம் எமது மக்களின் மீதான அடக்குமுறைகளையே அதிகரித்து வருகின்றது.

ஸ்ரீலங்கா இராணுவத்தினருடைய இத்தகைய செயற்பாடுகளானது மீண்டும் ஒரு போரை ஏற்படுத்துவதற்கான செயற்பாடாகவே நாம் கருதுகின்றோம். இவ்வாறான இராணுவக் கெடுபிடிகள் சமாதான முன்னெடுப்புகளுக்கு உகந்த சூழலை ஏற்படுத்தப் போவதில்லை என்பதனை எமது மக்கள் நன்கறிவர்.

ஸ்ரீலங்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் இந்த இராணுவ வன்முறைகளை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு ஓர் இயல்பு நிலையை ஏற்படுத்துவதன் மூலமே சமாதானம் மீதான நம்பிக்கையை உருவாக்க இயலும் என்பது வெளிப்படையான உண்மையாகும் - என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

### யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு

# தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு இம்முறை 800 மாணவர்கள் தெரிவு

யாழ்ப்பாணம், பெப்.2

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு ஆகிய தேசிய கல்வியியல் கல்லூரிகளில் இம்முறை 800 ஆசிரிய மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ளனர் என்று கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தேசிய கல்வியியல் கல்லூரிகளில் 2006ஆம் ஆண்டு புகுமுக மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு அண்மையில் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டன.

இதில் 800 பேர் புகுமுக ஆசிரிய மாணவர்களாக உள்வாங்கப்படவுள்ளனர்.

இவர்களில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரிக்கு இம்முறை 260 பேர் உள்வாங்கப்படவுள்ளனர் என்று கல்லூரியின் உபபீடாதிபதி க.தனபாலன் தெரிவித்துள்ளார்.

இந்த மாத இறுதிப் பகுதியில் இவர்களுக்குரிய பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-13)

**உதயவாக்கு**

அன்னியர்களுடன் சோலையில் இருப்பதைவிட நண்பர்களுடன் விலங்கிடப்பட்டிருத்தல் மேலாகும். - *பாரசீகம்.*

**நாளை**

தை 21
வெள்ளிக்கிழமை
03.02.2006
திதி: பஞ்சமி
முற்பகல்: 09.54 வரை
நட்சத்திரம் : ரேவதி
பின்னிரவு: 02.38 வரை
சுபநேரம் : 06.35-08.05
ராகுகாலம் : 11.05 - 12.35
(யாவும் பழைய நேரப்படி)

## ஆசிரியர் பதவியுயர்வு வழங்குவதில் கல்விப் பணிமனைகள் அசமந்தம்!

### தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சிடம் முறையீடு

அச்சுவேலி,பெப்.2

கல்வி அமைச்சின் திருத்தி அமைக்கப்பட்ட ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் ஆசிரியர்களுக்கான பதவி உயர்வு வழங்குவதற்கு வலயக் கல்வி அலுவலகங்கள் உரிய நடவடிக்கை எடுப்பதில் அக்கறை கொள்வதில்லை என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு முறையீடு செய்துள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரையும் மாகாணக் கல்விப் பணிப்பாளரையும் சந்தித்து ஆசிரியர்களின் பதவி உயர்வு தொடர்பான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தியுள்ளனர்.

2005ஆம் ஆண்டு மே மாதம் வெளியிடப்பட்ட திருத்தி அமைக்கப்பட்ட ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பு 2005/04 சுற்றறிக்கையின்படி 2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்திற்கு முன்னர் ஆசிரியர் பதவியுயர்வு தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது கல்வி அமைச்சின் பணிப்புரையாகும்

சுற்றறிக்கையின் படி.இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கல்வி அமைச்சு வலயக் கல்வி பணிப்பாளர்களிடம் விளக்கம் கேட்டு தனித் தனிக் கடிதம் அனுப்பி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி விடயங்களை எடுத்துக் காட்டி உடனடியாகப் பதவியுயர்வு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் வலியுறுத்தினர். (த-11)

**நகரின் சுத்தம் வீதிகளின் சுத்தத்தில்**
**வீதிகளின் சுத்தம் வீடுகளின் சுத்தத்தில்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண வாழ்த்து

இறைவன் திருவருள் துணையுடன் இன்று 02-02-2006 வியாழக்கிழமை திருமண பந்தத்தில் இணையும்

சுபாகரன் சுதர்சினி

தம்பதியினரை சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

குடும்பத்தினர்,
(வாணி ரெக்ஸ்) சாவகச்சேரி.

உரிமையாளரும், சக ஊழியர்களும்
வாணி ரெக்ஸ், யாழ்ப்பாணம்.

(46248)(26.15.17)



## மணியின் பொன்னகவை வாழ்த்துக்கள்

வேலணை மத்திய கல்லூரியின் அதிபரும் கல்லூரி வளர்ச்சிக்கும் தீவக வளர்ச்சிக்கும் ஓயாது உழைத்துவருபவருமான

உயர்திரு.பொ.அருணகிரிநாதன் S.L.P.S. I
B.A.(Hons), P.G. Dip in Ed.(Jaffna), M.Ed. (Jaffna)
அவர்கள் நீண்ட காலம் வளமுடன் வாழ பொன்னகவை நன்நாளில் வாழ்த்துகிறோம்.



COLLEGE OF ENGLISH,
JAFFNA. (46231)(21.15.17)

இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
மணி கல்வி நிறுவனம், வேலணை.


## பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்

## அறிவித்தல்

எமது சங்கத்தின் தையலகம் மாதாந்த அடிப்படையில் குத்தகைக்கு கொடுக்க தீர்மானித்துள்ளதால் பெற விரும்புவோர் 17.02.2006 இற்கு முன்னதாக கேள்வித்தொகையினை சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளவும். சாதாரண யூக்கி, கட்டிங் போன்ற தையல் இயந்திர வசதிகள் உண்டு.

பொது முகாமையாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்,
பண்டத்தரிப்பு.

(சி-47645)
(21.15.17)

## ஏழாலை தெற்கு வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

### வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்

| | |
|---|---|
| கொடியேற்றம்: | 03.02.2006 வெள்ளி |
| இரதோற்சவம்: | 11.02.2006 சனி |
| தீர்த்தோற்சவம்: | 12.02.2006 ஞாயிறு |
| தினமும் காலை | 7 மணி - அபிஷேகம் |
| தினமும் காலை | 10 மணி - பூஜை |
| முற்பகல் | 10 .30 - மணி சொற்பொழிவு |
| முற்பகல் | 11 மணி - வசந்த மண்டபப் பூஜை |
| முற்பகல் | 11.45 மணி - சுவாமி எழுந்தருளல் |
| பிற்பகல் | 1 மணி - அன்னதானம் |

- தேவஸ்தானம்.

(46267) (39)

## காணவில்லை



எ.மரியமலர் சரோஜா ஆகிய எனது மனைவி கடந்த மூன்று மாதங்களின் முன்பு வீட்டிலிருந்து ஒரு தொகைப் பணத்துடனும் தங்க நகைகளுடனும் காணாமற் போய்விட்டார். இவர் ஒரு மன நோயாளியுமாவார். இவரைக் காண்பவர்கள் கீழ் குறிப்பிடும் முகவரி களுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே.021 222 2426
222 3404

ம.எட்வேட்
இல.60, 6ஆம் குறுக்குத்தெரு,
குருநகர், யாழ்ப்பாணம்.

(46223)(21.26.16.15)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மகிமைக்குள் |
|---|---|
| 01 | 07 |
| - | - |
| 04 | 02 |
| - | - |
| 1941 | 2005 |



### திருமதி அழகம்மா கந்தசாமி (மேரி போல்)

முன்னாள் ஆசிரியை - யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

அன்பால் எமை அணைத்து
அறிவால் எம்மை உயர்த்தி
பண்பால் பலர் போற்ற
பாரினில் வித்திட்ட எம் தெய்வமே!
கர்த்தருக்குள் நீங்கள் மகிழ்ந்திருக்க
நாங்கள் காலமெல்லாம் நினைத்திருப்போம்

அன்னாரின் நினைவஞ்சலிக்கூட்டம் (05.02.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல்10 மணிக்கு கிராமக்கோட்டுச் சந்தியில் அமைந்துள்ள இலங்கை பெந்தகொஸ்தே சபைசாலையில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி உற்றார், உறவினர், பாடசாலைச் சமூகம் ஆகியோரை அன்புடன் அழைக்கின்றோம்.

தம்பசிட்டி,
பருத்தித்துறை.

(46257)
(21.17.15)

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கிரிக்கெட் இறுதிப்போட்டி

தென்மராட்சி,பெப்.2

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் கிரிக்கெட் அணிகளுக் கிடையிலான சுற்றுப் போட்டிகளின் இறுதிப் போட்டிகள் நாளை மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவ ரோதய மகா வித்தியாலய மைதானத்தில் நடை பெறவுள்ளன.

இதேவேளை வலயப் பாடசாலைகளின் ஆண், பெண் அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் நான்காம் ஐந்தாம் திகதிகளில் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலத்தில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(த-117)

## மின்சார வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை

தென்மராட்சி,பெப்.2

தென்மராட்சி தெற்கு கோவிலாக்கண்டி மத்திப் பகுதிக்கு மின் விநியோகிப்பதற்கென நிதி ஒதுக்கீடு செய்து ஆறு மாதங்களாகியும் இது வரை எந்தவொரு வேலையும் ஆரம்பிக்கப்படவில்லை என அப்பகுதி பொது அமைப்புகள் தெரிவித்தன.

புனர்வாழ்வு அமைச்சின் மேலதிகச் செயலாளரினால் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதிலும் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை என பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தெரிவித்தனர்.

(த-117)

## திடீர் மரண விசாரணை அதிகாரி பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி.,பெப்.2

தென்மராட்சி பிரதேசத்தில் பின்வரும் பிரிவுகளுக்கு திடீர் மரண விசாரணை அதிகாரிக் கான விண்ணப்பங்கள் பிரதேச செயலகத் தினால் கோரப்பட்டுள்ளன.

சாவகச்சேரி, கைதடி, வரணி, கொடிகாமம் ஆகிய பிரிவுகளுக்கே தகுதியானவர்களி டமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் பிரிவுகளில் 60 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம் எனவும் விண்ணப்பங்களை பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறும் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

(த-117)

## கோவிலாக்கண்டியில் வீதி புனரமைக்க நிதி

தென்மராட்சி,பெப்.2

தென்மராட்சி தெற்கு கோவிலாக்கண்டி அம்மன் கோயில் வீதி, முருகன் வீதி ஆகியவை 27 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கான நிதியினை நிக்கொட் நிறுவன உதவியுடன் சேவாலங்கா நிறுவனத்தினர் வழங்கியுள்ளனர்.

இதேவேளை - கோவிலாக்கண்டி செல்வா சனசமூக நிலையம் புனரமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

'சேவாலங்கா நிறுவனத்தினர் கோவிலாக்கண்டிப் பிரிவில் 60 லட்சம் ரூபா செலவில் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(த-117)


### கணனிகள் திருத்திக் கொடுக்கப்படும்

எல்லா வகையான கணனிகளும் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும்.
குறிப்பு: வீட்டுக்கு வந்தும் திருத்திக் கொடுக்கப்படும்.

(46256) ஜெகானந்
தொடர்பு:0776359186
(21.15.17)



### வேலையாள் தேவை

புத்தகசாலை ஒன்றிற்கு பெண் வேலையாள் தேவை. நாளை நேரில் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:
Vathana Book Shop
2/1, [illegible]
[illegible]

(46278) (21.15.17)


## வாழைப்பழங்கள் திருட்டு

தென்மராட்சி,பெப்.2

சாவகச்சேரி பொதுச் சந்தையில் வைக்கப்படும் வாழைக் குலைகளில் இரவு வேளைகளில் சீப்பு சீப்பாகப் பழங்கள் திருடப்பட்டு வருவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

சந்தை வாழைப்பழ விற்பனைப் பிரிவில் வாழைக் குலைகளை வைத்து விட்டுச் செல்வதாகவும் அண்மைக் காலமாக குலைகளிலிருந்து பழங்கள் திருடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(த-117)

# மரண அறிவித்தல்கள்

## சபாநாயகம் சிவகாமிப்பிள்ளை



சாமியன் அரசடியைச் சேர்ந்த சபாநாயகம் சிவகாமிப்பிள்ளை (30.01.2006) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சபாநாயகத்தின் (ஆசிரியர்) பாசமிகு மனைவியும் அமரர் யோகானந்தன் (பொறியியலாளர்), தேவானந்தன் (பொறியியலாளர்), கமலினி (கனடா), நந்தினி (கனடா), குகானந்தன் (பொறியியலாளர் - சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்), மாதினி (ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சௌகுந்தலா (கனடா), சுந்தரராஜன் (கனடா), மகாதேவன் (கனடா), குமுதினி (கனடா), சுலாதேவி (ஆசிரியை), அமிர்தலிங்கம் (பொறியியலாளர்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

31.01.2006 செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த அன்னாரின் இறுதிக்கிரியைகள் தவிர்க்க முடியாத காரணத்தால் இன்று (02.02.2006) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சோனப்பு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"கோவர்தனம்"
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

(46247)
(39.21.15.17)

தகவல்:
ச.குகானந்தன் (மகன்).

## பாலா செல்லையா யோகநாதன்



7OB - RTE-DUE COLLEX, 1293 - BELLEVUE, GENEVA, SWITZERLAND என்ற முகவரியைச் சேர்ந்த பாலசெல்லையா யோகநாதன் அவர்கள் 29.01.2006 ஞாயிற்றுக்கிழமை தை அமாவாசைத் திதியில் காலமானார்.

அன்னார் பாலா செல்லையா- பிரான் கொயிஸ் (FRANCOISE) தம்பதியின் பாசமிகு ஏக புதல்வனும் காலஞ்சென்ற பொன். செல்லையா - இரத்தினம்மா தம்பதியின் அன்புப் பேரனும் பாலச்சந்திரன் - லலிதகுமாரி தம்பதியின் பெறாமகனும் துரைராஜா கமலாஜினி, தியாகலிங்கம் பத்மாதேவி, சிவஞானம் கெங்காதேவி, விக்னேஸ்வரன் நிர்மலாதேவி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத்திற்கான கிரியைகள் நாளை (03.02.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு (SWIS Time) இற்கு Bernex இல் உள்ள புரட்டஸ்தாந்து தேவாலயத்தில் நடைபெற்று, பூதவுடல் Bernex சேமக்காலையில் நல்லடக்கம் செய் யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

SWIS
T.P.: 004122/7740623

தகவல்:
திருமதி கமலாஜினி துரைராஜா
916, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 7995

(46254) (24.21.17.15)

## திருமதி திரேசம்மா அருள்ராசா



யாழ். நாவாந்துறையைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேசம்மா அருள்ராசா அவர்கள் 31-01-2006 செவ்வாய்க்கிழமை காமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தீயோ அருள் ராசா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான சந்தியாப்பிள்ளை - ஆனாசி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அருளானந்தம் (முன்னாள் மரியா ஹோட்டல் உரிமையாளர்), திருமதி மொனிக்கம்மா, திருமதி அந்தோனியாப்பிள்ளை, திருமதி மாசில்லா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் திருமதி மேரி ஜெற்றூட்டம்மா (இன்பம் -நோர்வே), அருட்சகோதரி சகாயமரி (நல்லாயன் கன்னியர் சபை-எட்டியாந்தோட்டை), திருமதி எமல்டா (யோகம் - நோர்வே), திருமதி சகாயமலர் (றோசா - நோர்வே), ஆகியோரின் அன்புத் தாயும் ரவீந்திரன், (நோர்வே), உதயன் (நோர்வே), யோண் பிறிற்றோ (நோர்வே) ஆகியோரின் அன்புமிகு மாமியும் காலஞ்சென்ற திருமதி ஜெயமணி, காலஞ் சென்ற எஸ்தாக்கி (முன்னாள் அதிபர்) அந்தோனிப்பிள்ளை, காலஞ்சென்ற மைக்கல்தாசன் (முன்னாள் இ.போ.ச. பரிசோதகர்), காலஞ்சென்ற பத்திநாதர் (முன்னாள் யாழ். வாடிவீட்டு உரிமையாளர்), திருமதி அற்புதமுத்து, காலஞ்சென்ற திருமதி சின்னமணி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் நோர்வேயை வசிப்பிடமாகக் கொண்டவர்களான நவீயா, ஜெறோசன், ஸ்ரீபன் றாஜ், பிரசன்னா, பீலிக்ஸ், சொபியா, சில்வியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அருட்தந்தை அ.ம.ஸ்ரீபன் (இலங்கை அதிபர் செபமாலை தாசர்சபை), அருட்சகோதரன் மை.ஜீசஸ் பிரபு (பிலிப்பைன்ஸ்), நல்லாயன் கன்னியர்மட அருட்சகோதரிகளான பற்றிமா (நீர்கொழும்பு), நிக்கொலீன் (இணுவில்) ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சென்.மேரிஸ் வீதி,
நாவாந்துறை.

தகவல்:
பிள்ளைகள்.

(46271) (24.21.17.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவுப் பிரதேசத்திலும் கெடுபிடி நீங்கவில்லை!

## வழிச்சோதனைகளால் பயணிகள்பாடு பெரும் சிரமம்

நல்லூர்,பெப்.2

தீவுப் பகுதியில் படையினரின் வழிச் சோதனைக் கெடுபிடிகள் இன்னும் குறையவில்லை என்று மக்கள் கூறுகின்றனர்.

சமாதானத்தை ஏற்படுத்த படைத்தரப்பினர் எந்த நேரமும் தயாராக இருப்பதாக மனித உரிமை அமைப்புகளின் பிரதிநிதிக்கு உறுதியளித்த பின்னரும் இதுபோன்ற கெடுபிடிகள் தீவுப்பகுதியில் தொடர்வது குறித்து இப்பகுதி மக்கள் பெரிதும் விசனப்படுகின்றனர்.

தீவுப்பகுதியில் குறிகாட்டுவான் முதல் யாழ்.நகருக்கு வரும்வரை நான்கு இடங்களில் பயணிகள் பஸ்வண்டிகளில் இருந்து இறக்கப்பட்டு பலத்த சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். மடத்துவெளி சோதனைச் சாவடியில் பயணிகள் தமது உடைமைகளைத் தாம் பயணிக்கும் வாகனத்தில் விட்டு இறங்கிச் சென்றால் வாகனங்களில் ஏறிச் சோதனை செய்யும் படையினர் உடைமைகளைக் கீழே இறக்கி வைத்துவிட்டு மீண்டும் உரிமையாளர்களை வரவழைத்து அவற்றையும் பார்வையிட்ட பின்னரே வாகனங்களைப் புறப்பட அனுமதிக்கிறார்கள்.

தீவுப்பகுதிக்குக் கடமைக்குச் செல்லும் ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் இந்தச் சோதனைகளால் தாமதமாகவே கடமைக்குச் செல்ல வேண்டியுள்ளது.

"ஆறு மணித்தியாலங்கள் பயணம் செய்து இரண்டு மணித்தியாலங்கள் மட்டுமே படிப்பிக்கின்றோம்'' என ஆசிரியர் ஒருவர் விரக்தியுடன் கூறினார்.

அல்லைப்பிட்டி மடத்துவெளி சாவடிகளில் இடம்பெறும் சோதனை போதாதென, நெடுந்தீவுக்குச் செல்லும் பயணிகள் குறிகாட்டுவானில் படையினரின் பலத்த சோதனைகளுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது. நெடுந்தீவில் இருந்து வரும் பயணிகள், நெடுந்தீவுக்குச் செல்லும் பயணிகள் அனைவரும் உடற்பரிசோதனை உட்பட தம்முடன் எடுத்து வரப்படும் பொருள்களை கொட்டிக் காட்டியே மேற்கொண்டு தமது பயணத்தைத் தொடர வேண்டியுள்ளது. (ஐ-111)

# கைதுகள், வீதிச் சோதனைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும்

## உயர் கல்வி நிறுவன மாணவர் அமையம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,பெப்.2

கபட நோக்கிலான இராணுவச் செயற்பாடுகளை நிறுத்தி, உண்மையான - உறுதியான - சமாதானத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளை அரசு முன்னெடுக்கவேண்டும்.

பொதுமக்கள் மீதான துன்புறுத்தல்கள், கைதுகள் நிறுத்தப்படவேண்டும்.

- இவ்வாறு யாழ்.மாவட்டஉயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் அறிக்கை ஒன்றில் வலியுறுத்தி உள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ் மக்கள் மீது தொடரும் இராணுவ காடைத்தனங்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம். தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானத்திற்கான ஒரு சந்தர்ப்பத்தை ஸ்ரீலங்கா அரசிற்கு வழங்கி அதற்கான நல்லெண்ண சமிக்ஞைகளைக் காட்டி சமாதானத்தின் மீது அக்கறையுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் ஸ்ரீலங்கா இரா ணுவமானது தமிழ் மக்கள் மீதான வன்முறைகளைத் தொடர்ந்த வண்ணமே உள்ளது. கண்டி வீதியால் பயணம் மேற்கொள்ளும் அப்பாவி மக்கள் மீது பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்துதல், 28.01.2006 அன்று பல்கலைக் கழக மாணவர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டமை போன்ற நிகழ்வுகள் சமாதானம் மீது எமது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையைச் சீர்குலைப்பதாக அமைகின்றது.

அதாவது, பேச்சுக்காக இரு தரப்பும் ஓர் இணக்கப்பாட்டினை ஏற்படுத்திய பின்னர் ஸ்ரீலங்கா இராணுவம் மேற்கொண்ட மிலேச்சத்தனமான இத்தகைய செயற்பாடுகள் எம் மக்கள் மத்தியில் பெரும் விசனத்தையே ஏற்படுத்தியுள்ளது.




எனவே, உடனடியாக இத்தகைய செயற்பாடுகளை நிறுத்தி, ஓர் இயல்பான சூழலை உருவாக்க ஸ்ரீலங்கா இராணுவம் முன்வர வேண்டும் என வேண்டுகின்றோம்.

சமாதானம், சமாதானம் என்று ஸ்ரீலங்கா ஜனாதிபதி கூறிக்கொண்டிருக்கும்போது ஸ்ரீலங்கா இராணுவம் தமது வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டிருப்பது தென்னிலங்கையானது தமிழ் மக்கள் மீதான அடக்கு முறையையே வெளிப்படுத்தி நிற்கின்றது.

எனவே, கபட நோக்கிலான செயற்பாடுகளை நிறுத்தி உண்மையான - உறுதியான சமாதானத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளை சிங்கள அரசு ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென வேண்டுகின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வெளிவாரிப் பட்டப் படிப்புக்கு மீண்டும் விண்ணப்பிக்க வசதி

யாழ்ப்பாணம்,பெப்.2

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் அலகின் 2005-2006 கல்வி ஆண்டுக்குப் புதிய மாணவர் களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வர்த்தக முதற் கற்கைநெறி, கலை முதற் கற்கைநெறி, நுண்கலை மாணி ஆகிய பிரிவுகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கை நெறிகளுக்கு விண் ணப்பிப்பதற்கான முடிவுதிகதி 30.03.2006 ஆகும்.

இக்கற்கை நெறிகளுக்கு ஏற்கனவே விண்ணப்பங்கள் கோரப் பட்டிருந்தன. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாகவும் -

இதுவரை பதிவுகளை மேற்கொள்ளத் தவறிய மாணவர்கள் இக்கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு வசதியாகவும் -

புதிதாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று வெளிவாரிப் பட்டப் பதிவுகள் அலகின் உதவிப் பதிவாளர் எஸ்.கே.பிரபாகரன் தெரிவித்தார்.

மேலதிக விவரங்களையும் விண்ணப்பங்களையும் யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் நேரில் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-12)

# மாதகல் லூர்துமாதா ஆலய உற்சவத்துக்கு அனுமதி கோரல்

வலி.தென்மேற்கு,பெப்.2

மாதகல் கடற்கரைப் பகுதியிலுள்ள புனித லூர்து மாதா (கெவி) ஆலய வருடாந்த உற்சவத்தை வழமைபோல் இம்முறையும் நடத்துவதற்கு அனுமதி வழங்குமாறு மாதகல் புனித தோமையார்ஆலய பங்கு மக்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள இந்த ஆலயத்தின் வருடாந்த திருவிழா இம்மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

கடந்த பல வருட காலமாக இந்த உற்சவத்தை நடத்துவதற்கு பாதுகாப்புத் தரப்பினர் அனுமதி வழங்கி வந்தனர். இம்முறையும் அங்கு உற்சவத்தை நடத்துவதற்கு அனுமதிக்குமாறு பொன்னாலையிலுள்ள கடற்படை முகாம் பொறுப்பதிகாரியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (ஐ-135)

# திருக்குறள் மனனப் போட்டி

மானிப்பாய்,பெப்.2

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப்பாடசாலையினரின் ஏற்பாட்டில் திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு திருக்குறள் மனனப் போட்டிகள் மாணவர்களிடையே நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகளில் 2ஆம் தரம் தொடக்கம் 11ஆம் தரம் வரையான மாணவர்கள் பங்குபற்றலாம். எதிர்வரும் 12ஆம் திகதி மானிப்பாய் மெமோறியல் நவோதயாக் கல்லூரியில் இப்போட்டிகள் நடைபெறும்.

நான்கு பிரிவுகளாக நடைபெறும் இப்போட்டிகளில் பங்குபெற விரும்புவோர் அறநெறிப்பாடசாலை அதிபர் சமூகஜோதி கா.கணேசதாஸனுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகளில் வெற்றிபெறும் மாணவர்களுக்குரிய பரிசுகள் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ள சிவராத்திரி விரத கூட்டு வழிபாடு நிகழ்வில் வழங்கப்படவுள்ளன. (ஐ-90)

# வதந்தி பரப்பிய எஸ்.எம்.எஸ்.

யாழ்ப்பாணம்,பெப்.2

குடாநாட்டில் 'டயலொக்' கையடக்கத் தொலைபேசி இணைப்பு வைத்திருக்கின்ற பாவனையாளர்களிடையே நேற்றுமுன்தினம் பரவிய அநாமதேய எஸ்.எம்.எஸ்.தகவல் ஒன்றினால் ஏற்பட்ட வதந்தியால் பலர் ஏமாற்றமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் 'டயலொக்' (Dialog) நிறுவனத்தின் ஏழாம் ஆண்டு நிறைவு தினமென்றும், இதனைக் குறிப்பிடும் மேற்படி எஸ்.எம்.எஸ் தகவலை குறைந்தபட்சம் பத்து டயலொக் வாடிக்கையாளர்களுக்கு அனுப்பி வைப்பதன் மூலம் ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைபேசி அழைப்புகளை இலவசமாகப் பெறலாம் என்றும் அந்த தகவலில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனை நம்பிய பலர் ஆயிரம் ரூபா பெறுமதியான இலவச இணைப்பு கிடைக்கும் என்ற 'புளுகத்தில்' தமது உறவினர்கள், நண்பர்கள், தெரிந்தவர்கள் என 10 பேருக்கு அந்த எஸ்.எம்.எஸ். தகவலை அனுப்பினர்.

ஆனால், தொலைபேசியில் இருந்த காசும் செலவழிந்ததுதான் மிச்சம். ஒருவருக்கும் ஒரு ரூபா கூட இலவச இணைப்புக் கிடைக்கவில்லை.

இது தொடர்பாக யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள 'டயலொக்' அலுவலக அதிகாரியிடம் விசாரித்தபோது;

இது முற்றிலும் போலியான ஒரு எஸ்.எம்.எஸ். இதில் எந்த உண்மையும் கிடையாது என்றார். தமக்குக் கூட அந்த எஸ்.எம்.எஸ். வந்து சேர்ந்ததாகவும் கூறிச் சிரித்தார் அந்த அதிகாரி. (த-7-69)

# சுழிபுரத்தில் நால்வர் தாக்கப்பட்டனர்

சுழிபுரம்,பெப்.2

சுழிபுரம் சத்தியகாட்டுச் சந்தைக்குச் சமீபமாக வைத்து அப்பாவிகள் நால்வர் படையினரால் கண்டபடி தாக்கப்பட்டனர். காரணம் எதுவும் இன்றியே படையினர் இவர்களைத் தாக்கினர் என்று கூறப்படுகிறது.

கடந்த ஞாயிறு காலை சத்தியகாட்டுச் சந்தைக்கு முன்பாக உள்ள வீதியால் சென்ற படையினரே அங்கு நின்றவர்களைத் தாக்கினர்.

வாழைப்பழக் கடை வியாபாரி, தேநீர் கடைப் பணியாளர், ஓட்டோ சாரதிகள் இருவர் ஆகியோரே பலர் பார்த்திருக்க தாக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் அப்பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தியது. (ஐ-28)

# நாட்டுக்கூத்து கலைஞர்கள் சந்திப்பு

குருநகர்,பெப்.2

'நாட்டுக்கூத்தின் எதிர்காலம்' தொடர்பாக ஆராயும் நோக்குடன் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

நாட்டுக்கூத்துக் கலைஞர் பேக்மன் ஜெயராஜா தலைமையில் அன்று பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்திலுள்ள நாட்டுக்கூத்து அண்ணாவிமார்கள் கலந்துகொள்ள உள்ளார்கள். (ஐ-51)

# குருநகரில் மலத்தியோன் புகையூட்டல்

குருநகா,பெப்.2

குருநகர் குடியிருப்புப் பகுதியில் பரவியுள்ள நுளம்மை ஒழிக்கும் நோக்குடன் யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பகுதியினர் இங்குள்ள வடிகால்களில் மலத்தியோன் புகை விசிறி வருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் இந்தப் பணியை மேற்கொண்டுள்ளனர்.

குருநகர் ஐஸ்பிளான்ற் வீதியில் அமைந்துள்ள வடிகால்களில் ஆரம்பிக்கப்பட்ட இப்பணி நேற்றுமுன்தினம் குருநகர் தண்ணீர் தாங்கி வீதியில் உள்ள வடிகால்கள் வரை விஸ்தரிக்கப்பட்டு நடைபெற்றது. (ஐ-51)

# அடையாள அட்டை விண்ணப்பங்கள் திரும்பின

நவாலி,பெப்.2

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தேசிய அடையாள அட்டை பெறுவதற்காக விண்ணப்பித்த பலரது விண்ணப்பங்கள் பிரதேச செயலகத்தினால் அந்தந்தப் பகுதிக் கிராம சேவையாளர்கள் சிலரிடம் திரும்பக் கையளிக்கப்பட்டுள்ளன.

16 வயதைப் பூர்த்தியடைந்த பலர் அடையாள அட்டையைப் பெறுவதற்கு விண்ணப்பம் செய்திருந்தனர். ஆனால், பாடசாலையில் கல்வி கற்றதற்கான கடிதத்தை அதிபரிடமிருந்து பெற்று விண்ணப்பத்துடன் இணைக்காத காரணத்தினால் விண்ணப்பங்கள் திருப்பிக் கையளிக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்டவர்களைத் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு கிராம அலுவலர்கள் கேட்டுள்ளனர். (ஐ-100)

# கொமிசியக் கூட்டம்

குருநகர்,பெப்.2

புனித மரியாயின் சேனையின் மாதாந்தக் கொமிசியக் கூட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மறைக்கல்வி நடுநிலைய ஒன்றுகூடல் மண்டபத்தில் கொமிசியத் தலைவி வைலற் இம்மனுவேல் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ-51)

# பனங்கிழங்கு விற்பனை சரிவு

சுழிபுரம்,பெப்.2

சுழிபுரம் சத்தியகாட்டுச் சந்தைக்கு பனங்கிழங்குகளை விற்பனைக்காகக் கொண்டு வருவோர் அவற்றை விற்க முடியாது திருப்பி எடுத்துச் செல்கின்றனர்.

கிழங்கை வாங்குவதற்கு எவரும் இல்லாததாலேயே இவ்வாறு திருப்பி எடுத்துச் செல்ல நேர்வதாக வியாபாரிகள் தெரிவித்தனர். (ஐ-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை 2005

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யா/யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையின்

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை- 2005 இல் 48 மாணவர்களைச் சித்தியடையச் செய்ததின் மூலம், யாழ். மாவட்டத்தில் முன்னிலை வகிப்பதற்கு, கடமையே கண்ணாய் நின்று கற்பித்த ஆசிரியர் குழாத்தினரையும், உறுதிகுலையாது நின்று உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவச் செல்வங்களையும், பாடசாலையின் வாழ்விலும் வளத்திலும் கண்ணும் கருத்துமாகச் செயற்படும் அதிபரையும் மனம் நிறைந்து நன்றியுணர்வோடு பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்



கனிமொழி சுதானந்தராஜா புள்ளி 166 மாவட்டநிலை - 07

திவ்வியா ஜெயானந்தராஜா புள்ளி 156 மாவட்டநிலை -39

சோபனா பாலகுமாரன் புள்ளி 154 மாவட்டநிலை-53

பிரணவி ஸ்ரீதரன் புள்ளி 153 மாவட்டநிலை -64

ஜனனி சிவாகரன் புள்ளி 151 மாவட்டநிலை 79

சரண்யா சோமேஸ்வரன் புள்ளி 149 மாவட்டநிலை - 101



பிரதீபா சந்திரசேகர் புள்ளி 147

வைஷ்ணவி தங்கராஜா புள்ளி 146

சாரங்கா சபாநாயகம் புள்ளி 145

ஜனனி சடாச்சரஜோதி புள்ளி 145

சுபித்திரா சிவசுப்பிரமணியம் புள்ளி 143

சாம்பவி ஸ்ரீதர் புள்ளி 142



துளசிகா ரவீந்திரன் புள்ளி 142

சுஜநாராயணி செல்வரட்ணம் புள்ளி 141

லோஜிதா யோகேந்திரன் புள்ளி 139

சிந்துஜா ரவீந்திரராஜன் புள்ளி 138

கீர்த்தனா காசிலிங்கம் புள்ளி 137

சத்யா சிவானந்தராஜா புள்ளி 137

சுதர்சிகா சுந்தரலிங்கம் புள்ளி 137

யாழினி இராஜேந்திரன் புள்ளி 137

ஜிமாஜினி செல்வராஜா புள்ளி 136



விதுஷா ஜெயக்குமார் புள்ளி 136

ஸ்ரீவித்யா கணேசன் புள்ளி 135

நித்தியராணி சிறிதரன் புள்ளி 135

தனுஜா அமிர்தலிங்கம் புள்ளி 135

ஜனனிகா ரதீஸ்வரன் புள்ளி 134

தாட்சாயினி பாலகிருஷ்ணன் புள்ளி 132

டலக்ஷனா அன்பழகன் புள்ளி 132

தமிழினி நடராசா புள்ளி 132

கோபிகாசினி ஸ்ரீபதி புள்ளி 131



அர்ச்சனா சிவராஜா புள்ளி 130

சயிலா மகேந்திரன் புள்ளி 130

துவாரகா ஞானசேகரன் புள்ளி 130

பகீரதி பரமானந்தம் புள்ளி 129

நிரஞ்சனா கந்தசாமி புள்ளி 129

பவித்திரா குணரட்ணம் புள்ளி 127

துஷ்யந்தி கந்தசாமி புள்ளி 127

ஸ்ரீதுரா வரதராஜா புள்ளி 126

கௌசல்யா தியாகராஜன் புள்ளி 126



கனிஸ்ரா அரசரட்ணம் புள்ளி 125

சூரியப்பிரியா பாஸ்கரன் புள்ளி 125

மதுஜினி பாலச்சந்திரன் புள்ளி 125

லக்சியா ரகுநாதன் புள்ளி 124

மதுரா வீரசிங்கம் புள்ளி 124

நிவாஜினி ஆனந்தலிங்கம் புள்ளி 124

சர்மினி இராஜேந்திரன் புள்ளி 124

சுஜீவா முத்துலிங்கம் புள்ளி 124

ஆரணி தங்கராஜா புள்ளி 124





நல்லூர் கோட்டக் கல்வி பணிப்பாளர் K.V குணசேகரம் அவர்கள் 23.01.2006 பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற பாராட்டு விழாவில் கலந்து சிறப்பித்தார்.

இவர்களையும், இவர்களுடன் கல்வி கற்ற ஏனைய மாணவர்களையும் சகல கலைகளும் கற்று, கல்வியில் சிறப்புற வாழ்த்துகிறோம்.

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தரம் 5 மாணவர்களின் பெற்றோர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்து வன்னி சென்றோரால் கிளிநொச்சி ஆஸ்பத்திரியிலும் நெருக்கடி

வட்டக்கச்சி,பெப்.2

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான யாழ்.குடாநாட்டில் இருந்து இராணுவக் கெடுபிடிகளால் இடம்பெயர்ந்து அதிகளவான மக்கள் வன்னிக்கு வந்துள்ளதால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நோயாளர் தொகையும் அதிகரித்திருக்கின்றது.

போதிய வளங்களற்ற நிலையில் இயங்கும் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு தற்போது மேலும் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

வெளிநோயாளர் பிரிவில் நோயாளர் தொகை அதிகரிப்பதுடன் யாழ்ப்பாணம், வவுனியா போன்ற வைத்தியசாலைகளுக்கு மாதாந்த கிளினிக்குகளுக்கு செல்லும் வன்னிப் பகுதி நோயாளர்களும் இங்கேயே வருகை தருகின்றனர்.

இதனால், பெரும் எண்ணிக்கையானோருக்கு கிளினிக் சிகிச்சை வழங்க வேண்டியுள்ளது.

அத்துடன், கடந்த 19ஆம் திகதி வவுனியா ஓமந்தை சோதனைச் சாவடியில் கிளிநொச்சியில் வைத்தியசாலை 'அம்புலன்ஸ்' பயணத்தை இராணுவத்தினர் தடுத்து நிறுத்தியதால் வேறு இடங்களுக்கு நோயாளர்கள் சிகிச்சை பெறச் செல்வதற்கும் அஞ்சுகின்றனர் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-405)

## கால்நடை வளர்ப்புத் தொடர்பாக நெற்புலவுக் கிராமத்தில் பயிற்சி

கிளிநொச்சி மாவட்ட பூநகரி நெற்புலவுக் கிராமத்தில் கால்நடை வளர்ப்போருக்கான கருத்தரங்கு ஒன்று கடந்த 19ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் 'நியாப்' திட்ட சமூக வலுவூட்டாளர் அ.கோணேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கால்நடை தொடர்பான கருத்துரையை பூநகரி கால்நடை அபிவிருத்தி அலுவலர் க.சூரியகுமாரன் வழங்கினார். கால்நடை வளர்ப்பு தொடர்பான வீடியோ படக் காட்சியும் காண்பிக்கப்பட்டு விளக்கங்களும் வழங்கப்பட்டன.

அத்துடன், கால்நடைகளின் (ஆடு, மாடு) செயற்கைமுறைச்சினைப்படுத்தல் சம்பந்தமான விளக்க உரையும் வழங்கப்பட்டது. இதில் பெரும் தொகையான பயனாளிகள் கலந்துகொண்டு பூரண அறிவையும் விளக்கத்தையும் பெற்றுக்கொண்டனர். (த-403)

## குடைகள் அன்பளிப்பு

வவுனியா வடக்கு, நெடுங்கேணியில் 'றீடோ' நிறுவனத்தின் பெற்றோர் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கல்வி பயின்று தமது கல்வியை நிறைவு செய்த 30 பேருக்கு 'றீடோ' நிறுவனத்தால் அண்மையில் குடைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

'றீடோ' நிறுவனத்தின் பெற்றோர் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் வவுனியாவடக்கில் பல பெற்றோர்கள் கல்வி பயின்று பயன் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-355)

## செந்தளிர் இல்லத்துக்கு மின்பிறப்பாக்கி அன்பளிப்பு

கிளிநொச்சி,பெப்.2

வெளிநாட்டிலிருந்து வருகை தந்த டாக்டர் போல் என்பவர் 'செந்தளிர்' சிறுவர் இல்லத்துக்கு மின்பிறப்பாக்கி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளார்.

கிளிநொச்சி நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினூடாக இந்த மின் பிறப்பாக்கி வழங்கப்பட்டது என நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் தெரிவித்தார். (த-204)

## கிராமிய சுகாதார நிலையம் அளம்பிலில் திறந்துவைப்பு

ஒட்டுசுட்டான்,பெப்.2

முல்லைத்தீவு மாவட்ட கிராமிய சுகாதார நிலையம் அளம்பிலில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கடந்த 27 ஆம் திகதி அளம்பில் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அ. லீனஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பொதுச் சுடரினை அளம்பில் அருட்தந்தை அருட்திரு அமலதாஸ் அடிகளார், அளம்பில் முருகன் ஆலயக் குருக்கள் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியினை தியாக தீபம் திலீபன் மருத்துவமனை மருத்துவர் தில்லைநம்பி ஏற்றிவைத்தார். கிராமிய சுகாதார மருத்துவ நிலையப் பெயர்ப்பலகையினைத் தாய்சேய் நலமருத்துவ அதிகாரி கே. சுதர்ஸன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

கட்டடத்தினை முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் து.வி.ஜெயகுலராசா நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். (த-341)

## கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

## பனை தென்னை வள பேரிணையத்தில் அங்கத்தவர்களுக்கு மூக்குக்கண்ணாடி

பரந்தன்,பெப்.2

வடமாகாண பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையத்தின் அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்களுக்கான இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வும் பணியாளர் கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்றன.

கிளிநொச்சியில் அமைந்துள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பேரிணையத்தில் இந் நிகழ்வுகள் இடம்பெற்றன.

பொதுச்சுடரினை முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் எ.சின்னத்தம்பி ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் விஜிதரன் ஏற்றினார்.

தொடர்ந்து மங்கல விளக்கேற்றப்பட்டது. நிகழ்வில் நலத்திட்ட உரை, பணியாளர் நலத்திட்ட உரை, அங்கத்தவர் நலத்திட்ட உரை என்பன இடம்பெற்றன.

சிறப்புரைகளை கிளிநொச்சிமாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர், முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் சின்னத்தம்பி, கிளிநொச்சி கூட்டுறவு உதவி ஆணையாளர் கனகசபை ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து நாற்பதுக்கும் அதிகமான பேரிணைய அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டதுடன் பணியாளர் கௌரவிப்பும் இடம் பெற்றது. (த-6-352)

## திருவடி பயிற்சிப் பாசறையில் 5ஆவது படைப் பயிற்சி நிறைவு

லெப்.கேணல் திருவடி பயிற்சிப் பாசறையின் 5 ஆவது கரையோரக் காவல் படையின் பயிற்சி நிறைவு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழீழக் கடற் பரப்பில் சிறப்புற நடைபெற்றது.

பயிற்சியாளர் நா.மகேந்திரன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் பொதுச் சுடரை தமிழீழக் கடற்படையின் தளபதி மங்களேஸ் ஏற்றினார்.

தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ கடற்படைத் தளபதிகளில் ஒருவரான விநாயகம் ஏற்றினார்.

தமிழீழக் கடற்படையைச் சேர்ந்த மாவீரர் லெப்.கேணல் திருவடியின் திருவுருவப் படத்திற்கான ஈகச் சுடரை திருவடிப் பயிற்சிப் பாசறை பொறுப்பாளர் வின்சன் ஏற்றி வைக்க, மலர் மாலையை பயிற்சிப் பாசறை ஆசிரியர் டிஸ்கந்தராசா அணி வித் தார்.

தொடர்ந்து பயிற்சிகளின்போது நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு தளபதி மங்களேஸ் பரிசில்கள் வழங்கினார். சிறப்புரைகள், பயிற்சியாளர்களின் கலை நிகழ்வுகள் என்பனவும் இடம்பெற்றன. (ஐ-341-204)

## தையல் பயிற்சிநெறி

வட்டக்கச்சி,பெப்.2

'ஒக்ஸ் பாம்' நிறுவன நிதி உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தால் தையல் பயிற்சிநெறி ஒன்று நடத்தப்படவுள்ளது.

பெப்ரவரி மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கவுள்ள இப்பயிற்சியில் 35 பயிற்சியாளர்கள் பயிற்சி பெறவுள்ளனர் என்றும் - இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் அனைத்தும் பூர்த்தியாகியுள்ளதாகவும் கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

இந்த அணிக்கான பயிற்சிகள் முடிவடைந்ததும் தொடர்ந்து புதிய அணிகள் இணைத்துக் கொள்ளப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது. (த-405)

## புதுக்குடியிருப்பு வைப்பகக் கிளையில் கணக்கு வைத்திருந்த சிறாருக்குப் பரிசு

ஒட்டுசுட்டான்,பெப்.2

தமிழீழ வைப்பகத்தின் புதுக்குடியிருப்பு கிளையில் சிறார் உண்டியல் தேட்டத்தின் கீழ் பரிசுபெற்ற சிறார்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த 27ஆம் திகதி நடைபெற்றது.

பிரதேச மாநாட்டு மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமான நிகழ்வில் அமுதம் தேட்டத்தின் கீழ் பரிசுபெற்ற சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் நிகழ்வில் 10ஆயிரம் ரூபா நிலுவை அடைந்த சிறார்களுக்கு 500 ரூபா பெறுமதியான பரிசுகளும், 25 ஆயிரம் ரூபா நிலுவை அடைந்த சிறார்களுக்கு ஆயிரம் ரூபா பெறுமதியான பரிசில்களும், 50 ஆயிரம் ரூபா நிலுவை அடைந்த சிறார்களுக்கு 2 ஆயிரம் ரூபா பெறுமதியான பரிசில்களும், ஒரு லட்சம் ரூபா நிலுவை அடைந்த சிறார்களுக்கு 4 ஆயிரம் பெறுமதியான பரிசுகளும் தமிழீழ வைப்பகத்தால் வழங்கப்பட்டன. (த-341)

## கட்டாக்காலி நாய்கள் ஒட்டுசுட்டானில் அதிகம்

ஒட்டுசுட்டான்,பெப்.2

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொகை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இதனால், இப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, ஒட்டுசுட்டான் பிரதேச சபையினர் இதில் கவனமெடுத்து இந்த நாய்களை ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர். (த-341)

## இராமநாதபுரம் சனசமூக நிலைய கட்டடம் புனரமைத்துக் கையளிப்பு

வட்டக்கச்சி,பெப்.2

இராமநாதபுரம் சனசமூக நிலையக் கட்டடம் புனரமைப்புச் செய்யப்பட்டு கையளிக்கும் நிகழ்வு கடந்த 13ஆம் திகதி இடம் பெற்றது.

போரூட் நிறுவன நிதிஉதவியுடன் கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தினால் புனரமைப்புச் செய்யப்பட்ட கட்டடம் இராமநாதபுரம் மாதர் சங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன நிர்வாக அலுவலர் செல்வி ப.புஸ்பகுமாரி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் இராமநாதபுரம் மாதர் சங்கத் தலைவியிடம் கையளிக்கப்பட்டது.

இந்தச் சனசமூக நிலையத்தில் பாடசாலை மாணவர்களுக்கான பயன்தரு பாடநூல்கள், பயிற்சி நூல்களுடன் பொதுஅறிவு சம்பந்தமான நூல்களும் கதைப்புத்தகங்களும் பத்திரிகைகளும் உள்ளன என்றும் தொடர்ந்தும் மக்களுக்கான மேலதிக சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் மாதர் சங்கத்தினர் தெரிவித்தனர். (த-405)

## உணவகம் மூடப்பட்டது

பரந்தன்,பெப்.2

கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சி கட்சன் வீதிப் பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம் ஒன்று தமிழீழ சுகாதார சேவையினரால் சீல் வைத்து மூடப்பட்டது.

தமிழீழ சுகாதார சேவையின் விசேட நடவடிக்கைப் பிரிவினர் கடந்த வாரம் கட்சன் வீதியில் அமைந்துள்ள உணவகங்களில் திடீர்சோதனைகளை மேற்கொண்டனர். அதன்போது அப்பகுதியிலுள்ள சிற்றுண்டிச்சாலை ஒன்றின் சமையலறைப் பகுதி சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்பட்டமையால் அதனைச் சீல் வைத்து மூடினர். (ஐ-6-352)

## வட்டக்கச்சிப் பிரதேசத்தில் தற்காப்புப் பயிற்சி ஆரம்பம்

வட்டக்கச்சி,பெப்.2

பொதுமக்களுக்கான தற்காப்புப் பயிற்சிகள் வட்டக்கச்சிப் பிரதேசத்தில் பகுதிபகுதியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வட்டக்கச்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த அனைத்து மக்களுக்குமான தற்காப்புப் பயிற்சிகள் கடந்த 17ஆம் திகதி இராமநாதபுரம் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின.

தொடர்ந்து சம்புக்குளம் கிராம மக்களுக்கான பயிற்சி கடந்த 21 ஆம் திகதி பி.ப. 4 மணிக்கு சம்புக்குளம் முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. இங்கு தேசியக் கொடியினை கல்மடு இராமநாதபுரம் வலயப் பொறுப்பாளர் சந்திரன் ஏற்றிவைத்தார்.

கருத்துரையினை வட்டக்கச்சி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் திருமாறனும் சிறப்புரையினை சமாதான செயலகத்தைச் சேர்ந்த மிதுலனும் நிகழ்த்தினர். தொடர்ந்து தற்காப்புப் பயிற்சிகள் நடைபெற்றன.

26ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு நாவில் நகர் ரங்கன் குடியிருப்பு கிராம மக்களுக்கும் சேரன் அரிசிஆலை பணியாளர்களுக்குமான பயிற்சி நாவல் நகர் மைதானத்தில் நடைபெற்றது.

தொடர்ந்து ஏனையோருக்கான பயிற்சிகள் இடம்பெற்று வருகின்றன. (த-405)

## குரவில் வித்தியாலயத்தில் தரம் 10 ஆரம்பம்

பரந்தன்,பெப்.2

உடையார்கட்டு குரவில் தமிழ் வித்தியாலயத்தில் புதிதாக 10 ஆம் தரம் ஆரம்பிக்கப்படுவதற்கான ஆரம்ப வைபவம் கடந்த 26 ஆம் திகதி பாடசாலை அதிபர்.தீ.மேகநாதன் தலைமையில் காலை 10 மணிக்கு இடம்பெற்றது.

நிகழ்வில் சிறப்புரையை முல்லைத்தீவு மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் அரியரத்தினம் வழங்கினார்.

கருத்துரைகளைக் கோட்டக்கல்வி அதிகாரி பரமேஸ்வரன், உடையார்கட்டுப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலர் விஜயகுமார் ஆகியோர் வழங்கினர். (த-352)

## நெடுங்கேணி விவசாயிகளுக்கு கிராமிய வங்கி கடனுதவி!

ஒட்டுசுட்டான்,பெப்.2

கிராமிய வங்கியின் நெடுங்கேணி கிளையினரால் 20 பயனாளிகளுக்கு பத்தாயிரம் ரூபா வீதம் விவசாயச் செய்கைக்காக கடன் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் வழங்கும் நிகழ்வு கடந்த 27 ஆம் திகதி காலை 10 மணிக்கு நெடுங்கேணி கிளையில் கிராமிய அபிவிருத்தி வங்கியின் மேலாளர் க.கௌரிசங்கர் தலைமையில் நடைபெற்றது.

கடன் வழங்கலை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நெடுங்கேணி பிரதேச இணைப்பாளர் சதீஸ்குமார், நெடுங்கேணி பிரதேச அரசியல் துறையைச் சேர்ந்த மதன், நெடுங்கேணி கிராமிய அபிவிருத்தி வங்கியின் பிரதேச வெளிக்கள அலுவலர் கலைச்செல்வன் ஆகியோர் வழங்கினர்.

கருத்துரையைத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நெடுங்கேணி பிரதேச இணைப்பாளர், நெடுங்கேணி பிரதேச அரசியல்துறையைச் சேர்ந்த மதன் ஆகியோர் ஆற்றினர். (த 341)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# B.Sc மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் (வெளிவாரி)

- A/L இல் கணிதம் விஞ்ஞானம், இவற்றில் குறைந்த சித்தி பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- புதிய பிரிவுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன
- இவற்றுக்குரிய பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக ஆரம்பமாகிவிட்டன.
- பதிவு முடிவு திகதி: 15.02.2006

குறிப்பு: இப்பரீட்சைகள் யாவும் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.இணைப்பாளர். (46222) (24.17.15)

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,யாழ்ப்பாணம்.

# திருமண வாழ்த்து

இன்று (02.02.2006) வியாழக்கிழமை நாச்சிமார் கோவில் மண்டபத்தில் திருமணவாழ்வில் இணையும்

**சிவம் - சிவரூபி** தம்பதிகளை

இறைவன் துணையுடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

ஏழாலை.
குடும்பத்தினர், புஸ்பா,பிரேமா, அம்மம்மா குடும்பத்தினர், ராசன்(இத்தாலி), யோகன்(டோகா), சுசிலா(பளை),அத்தான்(டோகா).

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

Gas and Electric Cookers பாவிக்காத நான்கு காஸ் அடுப்புகள், கொட்பிளேட் மற்றும் அவுண் இவை அனைத்தும் ஒன்றாக உள்ளடங்கிய அடுப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு: கந்தசாமி, 16 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே 021 - 222 5080. (46255)

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி கிழக்கு, ஆடியபாதம் வீதியில் இருந்து முருகன் வீதிக்கு (வெள்ளை வாய்க்கால் வீதி) செல்லும் பாதையில் 2 ¾ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776680317, 0776279805 (46259)

## வீடுகள் விற்பனைக்கு

பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு, டிப்போவிற்கு அருகில் நவீன முறையில் புதிதாக கட்டப்பட்ட சகல வசதிகளுடன் அமைந்த வீடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S.கலைச்செல்வன், பலாலி றோட், இராமகிருஷ்ணா பாடசாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். T.P. 0773053063. (46076)

4 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு S.சிறி, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (கல்வாரிச் சேர்ச்சுக்கு அருகில்) T.P. No. 0777111400. (46251)

## பாடசாலை சேவை

கொக்குவில், கோண்டாவில், இணுவில், தாவடி ஆகிய இடங்களில் இருந்து யாழ். நகரப் பாடசாலைகளுக்கு பாடசாலை வான் சேவை செய்துகொடுக்கப்படும். தொடர்பு: ச.யோகநாதன், செம்பியன் சந்தி, கே.கே.எஸ். வீதி, கொக்குவில். T.P.No. 0776660572. (46191)

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் பிரபல இடத்தில் நவீன சந்தைக்கு அருகாமையில் கடை வாடகைக்குண்டு. தொடர்பு: இல.89 சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். T.P. 0776967448. (46181)

## மணமக்கள் தேவை

ஆஸ்திரேலியாவில் பிரஜாவுரிமையுடைய 40 வயது எஞ்சினியருக்கு மணமகளும், 35 வயதுடைய M.B.A. பட்டதாரியும் கெமிக்கல் எஞ்சினியருமான மணமகளுக்கு மணமகனும் தேவை. விவரங்களுடன் தனித்தனி சாதகக்குறிப்பு அனுப்பவும். தகுதியுடைய, பொருத்தமானவர்கள் மட்டும் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும். தொடர்பிற்கு: ஸ்ரீலஸ்ரீ சு.சிவஷண்முகானந்தக்குருக்கள், கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.(46082)

## மணமகள் தேவை

லண்டனில் வசிக்கும் (P.R இல்லை) கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கார்த்திகை நட்சத்திரம் 1975.02.19இல் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பிற்கு 0773060110. (46250)

## தவறிவிட்டது

கந்தசாமி சத்தியபாமா, நாவாந்துறை, யாழ்ப்பாணம் என்பவரின் தே.அ.அட்டை (606672101V) 29.01.2006 ஞாயிற்றுக் கிழமை தாண்டிக்குளத்திற்கும் ஓமந்தைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்புகொள்ளவும். 021 4590234. (46211)

## வருடாந்த ஒன்றுகூடலும் சேவை நலன் பாராட்டும்

மானிப்பாய் பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் சேவைநலன் பாராட்டு விழாவும் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் சங்கத்தின் சந்திரராசா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஊழியர் நலன்புரிச் சங்கத் தலைவர் சி.இரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சங்கத்தின் ஊழியர்கள் கி.கருணாகரன், பொ.கஜேந்திரன் ஆகியோருக்கு சேவைநலன் பாராட்டு விழாவும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து சங்கத்தின் பொது முகாமையாளர் க.சற்குணலிங்கம் சிறப்புரை நிகழ்த்துவார். ஊழியர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (த-13)

# திருமண அழைப்பு

நிகழும் பார்த்திப ஆண்டு தைத்திங்கள் 21ஆம் நாள் நாளை (03.02.2006) வெள்ளிக்கிழமை காலை 7.55 தொடக்கம் 9 மணிவரை உள்ள சுபவேளையில் எமது

| | |
|---|---|
| மூத்த புதல்வன் | இளைய புதல்வி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **சரவணன்** | **கல்யாணி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

இறைவன் அருளால் **5ஆம் கட்டை அளம்பிலில் அமைந்துள்ள மணமகனின் இல்லத்தில்** திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறும், தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இவ்வறிவித்தலை அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறும் அன்புடன் வேண்டுகின்றோம்.

(சி-47633)

**வே.சிவஅடியார் தம்பதிகள்**
5ஆம் கட்டை அளம்பில்,
முல்லைத்தீவு.

**ந.அனந்தராஜ் தம்பதிகள்**
தெணியம்பை,
வல்வெட்டித்துறை.

உ

# திருமண மங்கல வாழ்த்து



இன்று திருமண பந்தத்தில்
இணையும்
ஸ்ரீரங்கக் குருக்களும்
திருமகள் நேர் சுகந்தினியும்
அறநெறி சேர் இல்வாழ்வில்
அணிபெறவே இணைந்தவர் காண்
செறி தமிழும் சுவையும் போல்
சீருலகிற் பல்லாண்டு
இறைவனது திருவருளால்
இன்புற்று வாழியரோ!

கண்டி வீதி,
கொடிகாமம்.

சிவஸ்ரீ. இ.ஸ்ரீதரக்குருக்கள் (தம்பதிகள்) சகோதரர்.

# G.A.Q., Part I யாழ்.பல்கலைக்கழக (வெளிவாரி)

இவற்றுக்குரிய ஆங்கில இலக்கியம், மொழியியல்
புதிய பிரிவு ஆரம்பம்: 04-02-2007
காலை 7.30 மணி

ஆசிரியர்
**சோ.பத்மநாதன்**
(46220)(21.15.17)

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,யாழ்ப்பாணம்.

## தேவை

**ஐஸ்பழ வியாபாரிமார் தேவை**
*(சைக்கிள் வியாபாரி)*
தொடர்பு :077 6179090
(46261) (21.17.15)

## தவறிவிட்டது

நவரூபன் சுதாகரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (781958407V), விசேட அடையாள அட்டை 0905010868 என்பன கொக்குவில் இந்துக்கல்லூரியடியில் தவறிவிட்டன. கண்டெடுப்பவர்கள் சண்டிலிப்பாய் வடக்கு, கிராம சேவையாளரிடம் அல்லது கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபரிடம் ஒப்படைக்கவும்.
(46226) (21.15.17)

## உடன் தேவை

கிங்ஸ் எலக்றோனிக்ஸ் ஸ்தாபனத்திற்கு (CD - Writing) சீ.டி.றயிற்றிங் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
(5 கிலோ மீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)

**கிங்ஸ் எலக்றோனிக்ஸ்**
91, ஸ்ரான்லி றோட்,யாழ்ப்பாணம்.
(46202) (21)

## வாடிக்கையாளர்களே!

*நவீன டிஜிற்றல் 3CCD வீடியோ கமரா மூலம் உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான நிகழ்வுகளை வீடியோப் படம் பிடித்திட நாடுங்கள்:*

**மலரும் மலர்கள்**
**டிஜிற்றல் வீடியோ & போட்டோ**
சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். T.P.No. 0773146199
(46202) (21)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 30 - 05 - 1944 | 03 - 01 - 2006 |

## திருமதி தில்லை நேசம்

*ஆழாத்துயரில் எம்மை விட்டுப் பிரிந்த தாயே!*
*உமை நாம் இழந்த துயர் ஆறாத் துயரம்மா!*
*நீ! இவ்வுலகை விட்டு போகலாம் ஆனால்*
*எம் உள்ளத்தை விட்டுப் போக முடியுமா?*
*ஆறாதம்மா எம் துன்பச்சுமை! நீ எங்களைச்*
*சுமந்த சுமைகளை நாம் மறக்க முடியாமல்*
*தவியாய்த் தவித்து வேண்டி நிற்கின்றோம்*
*இறையடி உம் ஆத்ம சாந்திக்காக!*

தகவல்:
**சகாயராணி சின்னத்துரை**
(மகள்)(கற்றன்கம் ஜேர்மனி)
Kettenkamp Germany
தில்லை சிவகுமார்(மகன் லண்டன்)GreatBritain Landan

இவர் பிரிவால் துயருறும்:
**மகன்மார், மகள்மார்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டன்.**
(46216)(21.17.15)

# 41 ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 13 - 01 - 1952 | 25 - 12 - 2005 |

## திருமதி சாரதாதேவி சச்சிதானந்தம்

எங்கள் அன்புத் தெய்வமே !

எங்கள் இதயத்தை தங்கள் அன்பினால் நிறைத்தீர்கள்
காரியங்களில் நேர்மையையும் கருணையையும் காட்டினீர்கள்
உங்கள் பிரிவு எல்லோரையும் உலுக்கிவிட்டது
தங்களின் அன்பு முகமும், அனைவரையும் அனுசரிக்கும் பண்பும்
என்றும் எங்கள் இதயத்தில் தங்கிநிற்கும்
தங்களை அதிகம் பிடித்ததனால் தான் ஆண்டவன்
அகாலமாய் அழைத்து விட்டான் போலும்
தங்களின் ஆத்மா சாந்தியடைய இந்நாளில் (46241)
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (21.17.15)

ஓம் சாந்தி! சாந்தி ! சாந்தி !

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

**கணவர், சகோதரர்கள், பிள்ளைகள், மருமக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலையில் சாரதிகள், நடத்துநர்களுக்குப் பற்றாக்குறை!

## முகாமையாளர் கணேசபிள்ளை கூறுகிறார்

யாழ்ப்பாணம்,பெப்.2

இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலையில் நடத்துநர், சாரதி ஆகிய பதவிகளுக்கு அதிகளவில் பற்றாக்குறைகள் வெற்றிடங்கள் உள்ளன.

இதனை நிவர்த்தி செய்யாமையால் குடாநாட்டில் திருப்திகரமான பஸ் சேவையினை வழங்க முடியவில்லை - என்கிறார் யாழ். சாலையின் பொதுமுகாமையாளர் கே.கணேசபிள்ளை.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் அண்மைக்காலமாக போக்குவரத்துச் சேவை முன்னரை விட அதிகளவில் இடம்பெற்று வருகின்றது.

ஆனால், நடத்துநர்களுக்கு 150 வெற்றிடங்களும் சாரதிகளுக்கு 150 வெற்றிடங்களும் உள்ளன.

நீண்டகாலமாக இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன.

இதனை நிவர்த்தி செய்துதரும்படி போக்குவரத்து அமைச்சிடம் கோரியுள்ளேன். இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கென போக்குவரத்து அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தற்போது தென்பகுதியில் உள்ள போக்குவரத்துச் சாலைகளில் நடத்துநர்கள், சாரதிகளை இணைத்துக் கொள்வதற்கு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அடுத்தமாத முற்பகுதியில் குடாநாட்டில் இதற்கான நேர்முகப்பரீட்சைகள் இடம்பெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-13)

# இடம்மாற்றங்கள் பிற்போடப்பட்டன

தென்மராட்சி,பெப்.2

வடக்கு.- கிழக்கு மாகாண சமூகநலத் துறை திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட இவ்வருடத்திற்குரிய இடம்மாற்றங்கள் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது

இடமாற்றல் மேன்முறையீட்டுச் சபை கூடிய பின்னர் இது குறித்து அறிவிக்கப்படுமென மாகாணப் பணிப்பாளர் என்.ஆர்.ரஞ்சினி அறிவித்துள்ளார். (த-117)

# புங்குடுதீவுக்கு மின் வழங்குவதில் தாமதம்; மின்சாரசபை முகாமையாளர் தரும் விளக்கம்

யாழ்ப்பாணம், பெப்.2

புங்குடுதீவுப் பிரதேசத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கான மின் கம்பங்களைப் பொருத்துவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே உரிய வேளையில் அப்பகுதிக்கு மின்வழங்க முடியாமற் போனது.

- இவ்வாறு விளக்கமளித்திருக்கின்றார் இலங்கை மின்சாரசபையின் பிரதிப் பொது முகாமையாளர் வி.சண்முகநாதன்.

மின் கம்பங்களை நடும் வேலைகளைப் பொறுப்பேற்ற ஒப்பந்தக்காரர் திடீரென அந்த வேலைப் பொறுப்பில் இருந்து விலகிக்கொண்டதே தாமதத்துக்குக் காரணம் என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

புங்குடுதீவுப் பகுதி மக்கள் கடந்த வாரம் யாழ்.அரச அதிபருக்கு சமர்ப்பித்த மகஜரில் மின்சார விநியோகம் தொடர்பாகச் சுட்டிக் காட்டி இருந்தனர். அது தொடர்பான செய்தி கடந்த 31.01.2006 உதயனில் பிரசுரமாகியிருந்தது.

அந்தச் செய்தி தொடர்பாக மின்சார சபையின் பிரதிப் பொதுமுகாமையாளர் வி.சண்முகநாதன் நேற்று உதயனுக்கு விளக்கக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

புங்குடுதீவுப் பகுதிக்கு மின் வழங்கல் தொடர்பான வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் செய்வதற்கு ஒப்பந்தகாரரிடம் வேலை கையளிக்கப்பட்டது. மின்மார்க்க கம்பங்கள் நிறுத்தப்பட வேண்டிய குழிகள் தோண்டப்பட்டபோது கூடிய குழிகள் கற்பாறைகளை உடையனவாக இருந்தமையால், அவர்களுக்கு அதற்கான கொடுப்பனவு செய்வதற்கு உரிய கட்டணம் நிர்ணயிக்கப்பட்டது. எம்மால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை ஒப்பந்தக்காரர் ஏற்றுக்கொள்வது தொடர்பாக எடுத்த முயற்சிகளால் வேலை செய்வதில் காலதாமதம் ஏற்பட்டது.,எனினும், அவர் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை ஏற்றுக்கொள்ளாமையால் இந்த வேலையைச் செய்வதிலிருந்து தாமாகவே விலகியுள்ளார். இலங்கை மின்சாரசபை தனது ஊழியர்களைப் பாவித்து இந்த வேலையைப் பூர்த்தி செய்வதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது என்பதை தெரிவிப்பதோடு, கூடிய விரைவில் இந்த வேலை பூர்த்தி செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த காலதாமதத்தால் புங்குடுதீவு பிரதேச மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு மின்சார சபை மனம் வருந்துகிறது. என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. - (ஐ)

# சுற்றயல் கூறு ஆஸ்பத்திரிகளிலும் மருத்துவ அறிக்கை பெறலாம்!

குருநகர்,பெப்.2

அரச நிறுவனங்களில் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளவர்களுக்கான மருத்துவப் பரிசோதனைகளை இனிவரும் காலங்களில் மருத்துவ உத்தியோகத்தர்கள் கடமையில் உள்ள சுற்றயல்கூறு வைத்தியசாலைகள் மற்றும் கிராமிய வைத்தியசாலைகளிலும் மேற்கொள்ளமுடியும் என யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். இதுவரை காலமும் இம் மருத்துவப் பரிசோதனைகள் மாவட்ட வைத்தியசாலைகளிலேயே மேற்கொள்ளப்பட்டு மருத்துவ அறிக்கைப் படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டன.

எனவே, மருத்துவ உத்தியோகத்தர்கள் கடமையில் உள்ள சுற்றயல் கூறு வைத்திய சாலைகளிலும் கிராமிய வைத்தியசாலைகளிலும் இம் மருத்துவப் பரிசோதனைகளை செய்துகொள்ள முடியும் எனவும் -

இதற்கான மருத்துவப் பரிசோதனை அறிக்கைப் படிவங்கள் உரிய வைத்திய நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்படும் எனவும் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் மேலும் தெரிவித்தார். (த-51)

# 'மணிக்குரல்' நடத்தும் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.2

'மணிக்குரல்' விளம்பர சேவையினர் நடத்தும் கலைப்போட்டிகள், பாட்டுக்குப் பாட்டு, தேனிசைமழை தெரிவு நிகழ்ச்சிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

மதிவதனன், ஜெயச்சித்ரா சகோதரர்களின் 11ஆவது ஆண்டு ஞாபகார்த்தமாக நடைபெறவுள்ள இப்போட்டியில் பங்கு பற்ற விரும்புபவர்கள் அன்றைய தினம் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் மண்டபத்திற்கு சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

இந்த நிகழ்வுகளை ஒட்டி நடத்தப்பட்ட கரம் மற்றும் மேசைப் பந்தாட்டப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களின் பெயர் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

✱ கரம் (ஒற்றையர் - ஆண்) - பிரியதர்சன் (தங்கப்பதக்கம்), யுகேந்திரா.

✱ மேசைப்பந்தாட்டம் (ஆண்), மோகன் (தங்கப்பதக்கம்), டில்சான் (வெற்றிக்கிண்ணம்). (ஐ-202)



சிறுகதை, கவிதை, கட்டுரைத் தொகுதி என எட்டு நூல்கனை: எழுதியுள்ள க.முருகானந்தனின் முதலாவது குறுநாவல் தொகுதியான 'அது ஓர் அழகிய நிலாக்காலம்' தொகுதி அண்மையில் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் வெளியிடப்பட்டது. அவ்வேளை முதற் பிரதியை ஊடகவியலாளர் திருஞானசுந்தரத்திடமிருந்து மனோகரன் பெற்றுக்கொள்கிறார். இந்நிகழ்வில் ச.முருகானந்தனின் 'ஒரு மணமகளைத் தேடி சிறுகதைத் தொகுதியும் வெளியிடப்பட்டது. நூலாசிரியர் முருகானந்தனும் படத்தில் காணப்படுகிறார்.

# 495 தொண்டர் ஆசிரியர்களுக்கு இந்தமாதம் நிரந்தர நியமனம்

அச்சுவேலி,பெப்.2

வடக்கு - கிழக்கைச் சேர்ந்த 495 தொண்டர் ஆசிரியர்களுக்கு இந்த மாதம் தொடக்கம் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

நியமனம் வழங்கப்படவிருப்பவர்களின் பட்டியல் கல்வி அமைச்சின் அனுமதிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் அனுமதி கிடைத்ததும் நியமனக் கடிதங்கள் வழங்கப்படவிருப்பதாகவும் அறியப்படுகின்றது.

ஜீ.சி.ஈ.உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதி பெற்றவர்களும் 2004ஆம் ஆண்டு ஜனவரிக்கு முன்னர் மூன்று வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்களும் ஆசிரியர் நியமனம் பெறத் தகுதி பெற்றவர்கள்.

இதில் ஆரம்பக் கல்வி ஆசிரியர் நியமனத்திற்கு ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் தமிழ் பாடத்தில் சித்தியடைந்து இருக்க வேண்டும் என்பது கட்டாயமாகும்.

குறிப்பிட்ட தகுதி நிலையைப் பூர்த்தி செய்த தொண்டர் ஆசிரியர்களில் 495 பேரின் பெயர்ப்பட்டியல் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் கல்வி அமைச்சின் அனுமதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. கல்விஅமைச்சின் அனுமதி கிடைத்ததும் அவர்களுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது.

குறிப்பிட்ட தகைமை இருந்தும் நியமனம் கிடைக்காதவர்கள் பின்னர் மேன்முறையீடு செய்யலாம்" என தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார். (த-111)

# வடக்கு - கிழக்கில் 90 வீதமான சிறுவர்களுக்கு உளப் பாதிப்பு!

யாழ்ப்பாணம்,பெப்.2

வடக்கு - கிழக்கில் விசேட தேவையுள்ள உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் 90 வீதமானோர் உள்ளனர்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாத இறுதிப் பகுதியில் 'யுனிசெவ்' நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள ஆய்வு அறிக்கை ஒன்றிலேயே இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் வடக்கு - கிழக்கில் இடம்பெற்றுள்ள யுத்தம் காரணமாக 60 வீதமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் 20 வீதமானோர் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய மாணவர்களை ஆற்றுப்படுத்தி பாதிப்பிலிருந்து அவர்களை மீட்பதற்கு சகல தரப்பினரும் முன்வர வேண்டும் என்று [illegible] [illegible] ளது. (த-13)




# சாயிசிந்தனை



## ஆனந்தம் எவ்வாறு கிடைக்கும்?

ஆனந்தம் என்பது உன்னுள்ளேயே இருக்கின்றது. நீயே ஆனந்த வடிவினன் இருந்தும் என்ன பயன், அத்தனை செல்வமும் உன் காலடியில் இருந்தாலும் அவற்றை வெளியே தேடி அலைவதில் என்ன பயன்? பூமியின் அடியில் தண்ணீர் இருக்கின்றது. அதை எப்படி வெளியே கொணருவது? உனக்கும் தண்ணீருக்கும் இடையே மண் இருக்கின்றது. அது போலத்தான் உலகியல் விவகாரங்கள். இத்தகைய உலகியலான விஷயங்களை ஒதுக்கும்போது தண்ணீர் (ஆனந்தம்) கிடைக்கின்றது. போர்வெல் (Borewell) போட்டால் அது மண்ணில் புதைந்து தண்ணீரை எப்படி வெளிக்கொண்டு வருகின்றது. இதேபோலத்தான் நாமஸ்மரணை என்கின்ற போல்வெல் மூலமாக இதயத்தில் நிறைந்திருக்கும் ஆனந்தம் வெளிப்படுகின்றது. இறைவனது பெயர் நாவிலே எப்போதும் நிறைந்திருக்கட்டும்.

எதெல்லாம் நிரந்தர ஆனந்தம் தரக்கூடியவையோ அவை உண்மையிலேயே நமக்குள்ளே உறைகின்றன. ஆனால், அவ் உண்மையைப் புரிந்துகொள்ள நாம் எந்த வித முயற்சியும் எடுப்பதில்லை. உலோகாயுதமான வாழ்க்கைதான் உண்மை, சத்யம் எனக் கருதுகின்றார்கள்.

*(நன்றி:உண்மையின் உண்மை).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 751 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
| திகதி | 31-01-2006 | செல்லுபடியாகும் தொடர் இல. 4059555-4074591 |

வெற்றி இலக்கங்கள்

**01 06 11 52**

லக்கினம் இடபம்

ஜக்பொட் பரிசு ரூபா. 10,00,000/- வெல்லப்படவில்லை இந்த வெள்ளிக்கிழமை ரூபா. 17,33,100/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,28,158 | 10/- | 32,81,580/- |
| 2.இலக்கங்கள் | 30,173 | 20/- | 6,03,460/- |
| 1.இல லக்கினம் | 29,910 | 30/- | 8,97,300/- |
| 2.இல லக்கினம் | 2,705 | 100/- | 2,70,500/- |
| 3.இலக்கங்கள் | 809 | 500/- | 4,04,500/- |
| 3.இல லக்கினம் | 71 | 5,000/- | 3,55,000/- |
| 4.இலக்கங்கள் | 04 | 1,00,000/- | 4,00,000/- |
| 4.இலக்கங்கள் | - | 10,00,000/- | - |
| | | மொத்தம் | 62,12,340/- |
| மோட்டார் முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வென்னப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 72,64,590/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 62,12,340/- தொடர் இல. 5868800 க்கு பெறுமதி சிறப்பு திற டிக்கட்டுக்கள் 2006 ஜனவரி 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 5 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சேனர் வைகசெல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 02.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| புத்தளம் | 4069245-6-08 |
| கொழும்பு | 4072501-4-82 |
| கொழும்பு | 4067929-4-13 |
| மாத்தறை | 4069388-6-84 |
| மட்டக்களப்பு | 4063757-2-33 |


# கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி நகரசபையில் கடந்த
1990-2002ஆம் ஆண்டு காலப் பகுதியில்
சிறப்பாகக் கடமையாற்றிய

**சோமசுந்தரம் உதயகுமாரன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மசாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி. (சி/47649)

செயலாளர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

## வெளிவாரிப் பட்டப்படிப்பு பதிவு - 2005/2006

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் 2005/2006 கல்வியாண்டுக்கு பின்வரும் கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடியாகப் பதிவுசெய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடமிருந்து 31-03-2006 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

குறிப்பு: மேற்படி திகதிக்குப்பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும் என்பதுடன் மேற்படி பதிவுகள் தொடர்பான சகல நடவடிக்கைகளும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினுள் அமைந்துள்ள வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் மட்டுமே மேற்கொள்ளப்படும்.

1. வர்த்தக முதற் கற்கை நெறி
2. கலை முதற் கற்கை நெறி
3. நுண்கலைமாணி (சங்கீதம்/நாட்டியம்) முதலாம் வருடம்
4. நுண்கலைமாணி (சங்கீதம்/நாட்டியம்) இரண்டாம் வருடம்
5. நுண்கலைமாணி (சங்கீதம்/நாட்டியம்) மூன்றாம், நான்காம் வருடம்

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக்கலைமாணி பகுதி - 1 கற்கை நெறிக்குப் பதிவுசெய்து கொள்ளலாம்.
இந்துநாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், தமிழ், நுண் கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவநாகரிகம், மெய்யியல், அரசறிவியல்.

| கட்டண விவரம் | ரூபா |
|---|---|
| விண்ணப்பப் படிவம் | 100.00 |
| பதிவுக் கட்டணம் | 1000.00 |
| பாடத்திட்டமும் விதி முறைகளும் (முதற்கலை/முதல் வர்த்தக நெறிக்கானது) | 250.00 |

விண்ணப்பப் படிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாகப் பெறவிரும்புவோர் யாழ்.பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக்கிளையில் உரிய தொகைகளைச் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்து எமது அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
தபால் மூலம் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட உரிய தொகைக்கான காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் சுய முகவரியிடப்பட்ட ரூபா 20 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28 X20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன் உதவிப்பதிவாளர், வெளிவாரிப்பட்டப்பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

(சி/47646) பதிவாளர். 01-02-2006

## கேணல் பானு-நியாப் பிரதிநிதிகள் மட்டக்களப்பில் சந்திப்பு

மட்டக்களப்பு,பெப்.2

நியாப் திட்டத்தின் இரண்டாம் கட்ட வேலைகள் தொடர்பான செயலமர்வு கடந்த திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் கரடியனாறு தேனகத்தில் நடைபெற்றது. இதில் மாவட்ட மேலதிக செயலாளர் க.மகேசன் மற்றும் நியாப் திட்டத்தின் பிரதிநிதிகள், தமிழீழ விடுதலைப்புலிகளின் தரப்பில் மாவட்டகட்டளைத் தளபதி கேணல் பானு, அரசியல்த்துறைப் பொறுப்பாளர் தயா மோகன், மகளிர் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழ்நிலவு, நிர்வாக சேவைப் பொறுப்பாளர் தங்கையா, மாவட்டத் தளபதி நாகேஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் மட்டு மாவட்டத்தில் படுவான்கரைப் பிரதேசத்தில் மேற் கொள்ள வேண்டிய வேலைத் திட்டங்கள் பற்றியும் இவ்வாண்டு பிரதேசத்தில் மேற் கொள்ள வேண்டிய வேலைகள் பற்றியும் கலந்துரை யாடப்பட்டன.

## வகுப்பறைக் கட்டடம் திறந்து வைப்பு

வலி.தென்மேற்கு,பெப்.2

பண்ணாகம் வடக்கு அமெரிக்கமிஷன் த.க.பாடசாலையில் யுனிசெவ் நிறுவனத்தின் நிதி உதவியுடன் மறு சீரமைக்கப்பட்ட வகுப்பறை கட்டடத்தின் திறப்பு விழாவும் புதிதாக அனுமதிக்கப்பட்ட தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் வைபவம் கடந்த 18ஆம் திகதி சிறப்பாக நடைபெற்றன.

பாடசாலை அதிபர் க.ஹரிஹரசக்தி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் சங்கானை கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளர் நா.சண்முகசுந்தரம் மறுசீரமைக்கப்பட்ட வகுப்பறை மண்டபத்தை திறந்து வைத்தார். தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

(த-135)

## கூட்டம்

தென்மராட்சி.பெப்.2

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இருந்து தென்மராட்சி கிழக்குப் பிரதேச செயலகம் அமைப்பது தொடர்பான கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் பிரதேசம் பிரிக்கப்படுவது தொடர்பாக மக்களின் கருத்துகள் அறியவுள்ளதாகவும் பிரதேச மக்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துகளை தெரிவிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-117)

## நிவாரணம் வழங்க ஏற்பாடு

தென்மராட்சி,பெப்.2

தென்மராட்சிப் பிரதேச மக்களுக்கான ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் ஆகிய மாதங்களுக்கரிய நிவாரணப் பொருள்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிரதேசத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் யாழ்.செயலகத்திட்டப் பணிப்பாளரிடம் விலைக் கட்டளைகளைப் பெற்று உலர் உணவுப் பொருள்களை வழங்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

(த-117)

## செயலமர்வு

தென்மராட்சி.பெப்.2

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம்11 வகுப்புகளில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயல் திட்டச் செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இப்பாடம் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

(த-117)

# கண்ணீர் அஞ்சலி



*சபா சண்முகேஸ்வரன்* (I.P.T)

சபாரத்தினம் சண்முகேஸ்வரன் (அத்தான்-I.P.T) அவர்கள் 30.01.2006 கொழும்பில் காலமானதையிட்டு துயருறும் அக்கா, பிள்ளைகள், மற்றும் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காக இணுவில் பரராஜசேகரப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

இணுவில்.

[illegible] (குடும்பத்தினர்)
இரா. அருட்செல்வம் (குடும்பத்தினர்)
(46282)(15-45-18)



சிவமயம்

மீசாலை மேற்கு
**ஸ்ரீ நரசிங்க வைரவர்
காளி அம்பாள் தேவஸ்தானம்**
புனராவர்த்தன பிரதிஸ்டா பஞ்ச குண்டபக்ஷ
உத்தம மகாயாக சம்புரோஹண அஸ்டபந்தன



## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

ஸ்ரீ நரசிங்க வைரவ, காளி அம்பாள் அடியார்களே!

ஈழமணித் திருநாட்டின் தென்மராட்சிப் பதியின் சைவமும் தமிழும்சிறந்து விளங்கும் மீசாலைப் பதியில் திருவுளங் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீநரசிங்க வைரவப் பெருமானுக்கும் காளி அம்பாளிற்கும் பரிவார மூர்த்திகளிற்கும், நிகழும் பார்த்திப வருடம் தை மாதம் 21 ஆம் நாள் வெள்ளிக்கிழமை (03.02.2006) காலை 7.54 முதல் 9.06 மணி வரையுள்ள கும்பலக்கினமும் ரேவதி நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் கூடிய தெய்வீக சுபமுகூர்த்த வேளையில் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் நிகழ திருவருள் பாலித்துள்ளது. இக்கும்பாபிஷேகப் பெருவிழாவிலும் அதற்கு முன் நடைபெறவுள்ள சகல கிரியா நிகழ்வுகளிலும் பின் நடைபெறவுள்ள மண்டலாபிஷேகத்திலும் பங்கு பற்றி வைரவப் பெருமானினதும் காளி அம்பாளினதும் இஸ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

**பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல்**
02.02.2006 வியாழன் காலை 9 - பிற்பகல் 4 மணிவரை
**மகா கும்பாபிஷேகம்**
03.02.2006 காலை 7.54 -9.06 மணி வரை

*ஆசியுரை:*
செஞ்சொற் செல்வர் **திரு.ஆறு.திருமுருகன்** அவர்கள்
*(உப அதிபர் யாழ்.ஸ்கந்தவரோதயக் கல்லூரி)*
கும்பாபிஷேக பிரதமகுரு
***சிவஸ்ரீ.க.வீரபத்திரக் குருக்கள்***
*(மீசாலை மேற்கு நரசிங்க வைரவர் தேவஸ்தானம்)*

மெய்யன்பர்கள் காணுதற்குரிய கும்பாபிஷேகப் பெருவிழாவைத் தரிசித்தும் மகா கும்பாபிஷேகத்திற்கு தேவையான சமித்துக்கள் பால், தயிர், இளநீர், படிவகைகள், பூ, மாலைகள், அன்னதானப் பொருள்கள் என்பனவற்றை வழங்கியும் திருப்பணி வேலைகளுக்கு தேவையான நிதி,சரீர உதவி என்பனவற்றையும் வழங்கியும் சிறப்பிப்பதோடு வைரவப் பெருமானினதும், காளி அம்பாளினதும் திருவருளைப் பெற்று பேரின்பப் பெருவாழ்வு வாழ்வீர்களாக.

மீசாலை மேற்கு,மீசாலை. (46280)(15-45) ஆலய பரிபாலன சபை.

## கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை வெற்றிடங்கள்

**கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்**

தகைமைகள் :- க.பொ.த.(சா/த) சித்தி
உயரம் :- 5'4'' மார்பு :- 32''
நல்ல கண் பார்வையும் தேகாரோக்கியமும் இருத்தல் வேண்டும்.
சம்பளம் :-ரூபா 6300/= (மாதமொன்று)ம்
ஒழுங்கு வருகைரூபா800/= (மாதமொன்று)ம்
EPF,ETFஉம் காப்புறுதி நன்மைகள் வழங்கப்படும்.

*கிராம அதிகாரியின் நற்சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், தே.அ.அட்டை, கல்விச் சான்றிதழ் என்பவற்றுடன் 08-02-2006ஆம் திகதி முற்பகல்10மணிக்குக் கீழ்க்காணும் காரியாலயத்தில் நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் கொடுக்கவும்.*

இல.337-1/1,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி/47639)(26-15-45) - **பணிப்பாளர்.**

*நீங்காத நினைவலைகளுடன்*
**31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

*மலர்வு* 05 - 09 - 1928



*மறைவு* 03 - 01 - 2006

## திருமதி *சின்னத்தங்கம் அப்பையா*

கடந்த 03.01.2006அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி சின்னத்தங்கம் அப்பையா அவர்களின் சபிண்டீகரணப் பிரார்த்தனை இன்று 02-02-2006 முற்பகல் 10 மணிக்கு அவரின்இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து நண்பகல் மதிய போசனமும் நடைபெறும். இவ்வைபவத்தில் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

169/5, முதலாம் ஒழுங்கை,
அரசடி றோட், நல்லூர். (46284)(26-15-45)

மக்கள், மருமக்கள்.

# மரண அறிவித்தல்



## *அம்பலவாணர் நடராசா*

குப்பிளான், ஏழாலையைப் பிறப்பிடமாகவும் 25, மணல்தறை லேன் கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் வசிப்பவருமான அம்பலவாணர் நடராசா 01.02.2006 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும் பூபாலசிங்கம், விக்கினேஸ்வரன், தவபாலன், மருதமலர், மல்லிகாதேவி, தர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(02.02.2006)வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு பி.ப.2.30 மணிக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மருதமலர் வரப்பிரசாதம் *(மகள்)*

25, மணல்தறை லேன்,
கந்தர்மடம்,யாழ்ப்பாணம். (46277)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துகின்றோம்

இல்லற வாழ்வில்
இனிதே இணைந்து இன்று
(02.02.2006) வியாழக்கிழமை
32ஆவது ஆண்டில் கால்பதிக்கும்
திரு. திருமதி சௌந்தரராஜன் இராஜலட்சுமி
தம்பதியர் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ துர்க்கை அம்மனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

துர்க்கா நகைப்பூங்கா
71, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(46290)(33-16-49)

பிள்ளைகள்.



# திருமண வாழ்த்து

## கணேஷ் - யாழினி

மங்கள நாளாம் பார்த்திப வருஷம்
தைத்திங்கள் இன்றைய நாளில்
திருவளர் செல்வன் கணேஷ்
தன்னுடன் திருவளர்செல்வி
யாழினி யாரும் சீருடன் இணைந்து
வாழும் நாளில் பார்புகழ்
பதினாறு பேறும் பெற்று
ஒருயிர் ஈருடலாக
இணை பிரியாது இன்பத்தோடு
இனிதே வாழ தேனினில் இனிமையாக
வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
சகோதரிகள்.

இல.70,
இலந்தைக்குளம் வீதி,
பிரப்பங்குளம்,
மகாமாரி அம்மன் கோயில்,
அரியாலை.

(46292)(33-16-49)

# கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் கடமையாற்றும்
**திருமதி தனலட்சுமி தவராசா** அவர்களின் தந்தை

## எஸ்.பசுபதிப்பிள்ளை

அவர்களின் மறைவு குறித்து எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்,
வலயக்கல்வி அலுவலகம்,
வடமராட்சி.

(சி/47655)(33-16-49)

# தரம் 4 - மாணவர்களின்

எமது கல்வி நிலையத்தில் கபிலன் ஆசிரியரின் விசேட வழிகாட்டல் வகுப்புகளும், விசேட பரீட்சைகளும் இடம் பெறுகின்றது. பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்களும், வினாத்தாள் தேவைப்படும் நிறுவனங்களும் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

தரம் - 4 விசேட வகுப்புகள் - கபிலன் ஆசிரியர்
**ஞானக்குழந்தை கல்விக் கழகம்,**
இல.19, சிவன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (சி-47648) (25-16-49)

# சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம்,பெப்.2

வண்ணை - கன்னாதிட்டி காளியம்பாள் ஆலய மகா கும்பாபிஷேக தின சகஷ்ர சங்காபிஷேகம் எதிர்வரும் 11ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சகஷ்ர சங்காபிஷேகம், பரிவார மூர்த்திகளுக்கு உருத்திராபிஷேகம் என்பன நடைபெற்று அம்பாள் உள்வீதி வலம் வரும் நிகழ்வும் இடம்பெறும். (ஐ-204)

# தவறிவிட்டது

எழுதுமட்டுவாழ் தெற்கைச் சேர்ந்த கந்தசாமி தவக்கிருபா என்பவருடைய தே.அ.அட்டை (இல.760863653V) வி.அ.அட்டை அடங்கிய பேர்ஸ் அளவெட்டியில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் 0779599478, 0779688381 என்ற தொ.பே.இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவகுரு செல்லம்மா



சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் மடத்தடி றோட், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு செல்லம்மா 30.01.2006 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா சிவகுருவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (விதானையார்), இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் தங்கம்மா (லண்டன்), அமரர்களான பாலசுந்தரம், அன்னலட்சுமி, மகாலிங்கம், மார்க்கண்டு மற்றும் விசாலாட்சி, அரியரட்ணம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தவமணிதேவி (தவம்), ஜெனசோதி (இந்து - சுவிஸ்), சிவராசா (சிவா - சுவிஸ்), செல்வராசா (மோகன் - லண்டன்), வாசுகி (சுவிஸ்), நடனதாஸ் (ராசன் - லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் குமாரசாமி (கால்நடை அலுவலர்), தனபாலசிங்கம் (நட்சத்திரம் - சுவிஸ்), சரோஜா கோகுலதாசன் (சுவிஸ்), தயாளினி, ஞானகலாதேவி (லண்டன்) ஆகியோரின் மாமியும் முரளி (பொறியியலாளர் - லண்டன்) சுஜாதா மற்றும் கஜீபன், கஜந்தா, அகிலன், வாணிபூரீ, அபிசனா, அபிவர்ணன், அபிநயா, விதுர்ஷன், யதுர்சன், ஆரதி ஆகியோரது பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2006) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பெரிய அரசடி வீதி, சங்கத்தானையில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரிய அரசடி வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

(சி/47654)
(33-16-49)

தகவல்:
பொ.குமாரசாமி
(மருமகன் - கால்நடை அலுவலர்)

## சுப்பிரமணியம் கனகசுந்தரம் (குட்டியப்பா)

*(முன்னாள் கணக்கு எழுதுநர், சிலோன் மேர்ச்சன்ஸ், காசாளர், சுபாஸ் கபே, யாழ்ப்பாணம்)*



சிறுப்பிட்டி தெற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் கனகசுந்தரம் (குட்டியப்பா) அவர்கள் நேற்று முன்தினம் (31.01.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சொர்ணம்மா சங்கரப்பிள்ளையின் உடன்பிறவாச் சகோதரரும், லோகநாயகி இராமலிங்கம், சங்கரப்பிள்ளை இராசேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் இ.ஐங்கரன் (ஜேர்மனி), இ.முரளிதரன் (சுவிஸ்), இ.ஞானகரன் (சுவிஸ்), இ.தயாகரன் (சுவிஸ்), கரன் சாரதாதேவி, ஜெயக்குமார் (கனடா) ஆகியோரின் பிரிய பேரனாரும், வே.சந்திரசேகரம்பிள்ளை (முன்னாள்அதிபர், யா/ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்), வே.பரிமேலழகபிள்ளை (முன்னாள் சேவைக்கால ஆங்கில ஆசிரிய ஆலோசகர், யாழ். வலயம்), வே.முருகேசபிள்ளை (ஆஸ்திரேலியா), வே.அனவரதவிநாயகம்பிள்ளை (புத்தூர்), பேரின்பநாயகி, மயில்வாகனம் ஆகியோரின் பாசமுள்ள மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2006) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நண்பகல் 3 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் பி.ப. 5 மணியளவில் தகனக்கிரியைக்காக காளையன்புலம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

சிறுப்பிட்டி தெற்கு,
சிறுப்பிட்டி.

(46285)(33-16-49)

தகவல்:
உறவினர்கள்.


## HND வழிகாட்டல் கருத்தரங்கு

**HND** கற்கைநெறியினைப் பயில விரும்பும் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 05.02.2006 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இல. 100 மணிக்கூண்டு வீதியில் அமைந்துள்ள IIS நிறுவன பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கருத்தரங்கில் வெளிநாட்டு உயர்கல்வி, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான விடயங்கள் வழங்கப்படவுள்ளன.

ஆர்வமுள்ள பெற்றோர்கள், மாணவர்கள் அனைவரும் பங்குபற்றிப் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இயக்குநர்
**IIS City Campus**
181, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 8060

(சி-47656) (25-33-16-49)

நாதன்ஸ் யாழ்ப்பாணம்
பொங்கல் வெளியீடு
அல்டிமேட் அஜித், லைலா
மற்றும் பலர் நடித்த
பரமசிவன்
காட்சி நேரம்:
10.30, 2.30



ராஜா யாழ்ப்பாணம்



சிம்பு, ஜோதிகா,பிரகாஷ்ராஜ் நடித்த
சரவணா
இயக்கம்: K.S.ரவிக்குமார்
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.
காட்சிநேரம்:
பு.நே. 10.30, 2.15 மட்டும்

நாகம்ஸ் சுன்னாகம்



சூர்யா, திரிஷா,
வடிவேல் நடித்த
ஆறு
தினசரி:
பு.நே. 11.00, 3.00


# மரண அறிவித்தல்கள்

## வீரவாகு செல்லையா

காரைநகர், வாரிவளவைச் சேர்ந்த வீரவாகு செல்லையா அவர்கள் நேற்று (01.02.2006) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வாரிவளவு, காரைநகர்.*
0776549791

(சி/47658)(33-16-49)

தகவல்:
மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## பொன்னுத்துரை அரியரட்ணம் (அருமை)

*(ஓய்வூதியர், வலி. கிழக்கு பிரதேச சபை, உப அலுவலகம் உரும்பிராய் )*



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை அரியரட்ணம் அவர்கள் 30.01.2006 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை (தலைமை ஆசிரியர்) அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா (ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்), இராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும் பராசக்தியின் அன்புக் கணவரும் அமுதினி (டென்மார்க்), அகிலினி (ஆசிரியை, புதுக்குடியிருப்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிறேமச்சந்திரன் (டென்மார்க்), கேதீஸ்வரன் (P.H.I வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் மிதுலன், சஜிலன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேரனும் சிவசுப்பிரமணியம் (லண்டன்), சிவகுமாரி (உடுவில்), காலஞ்சென்ற தியாகி சிவகுமாரன், சிவயோகன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.02.2006) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பன் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகுமாரன் இல்லம்,
முருகன் வீதி,
உரும்பிராய் கிழக்கு.

(46291)(33-16-49)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், சகோதரர்கள்.

## சபா. சண்முகேஸ்வரன் (P.P.T.)



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை (துரை வீதி) வசிப்பிடமாகவும் கொண்ட சபா. சண்முகேஸ்வரன் அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினம் ஆச்சிமுத்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் K.R.S. நிறுவன உரிமையாளர் இராசையா - இராசம்மா தம்பதியரின் மூத்த மருமகனும் பூமணியின் அன்புக் கணவரும் அனுசியா, ஜெயநேசன் (லண்டன்), பத்மநேசன் (விரிவுரையாளர், பேராதனை பல்கலைக்கழகம்), சௌமியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் விமலேந்திரன் (செல்லா சண்) றொசாந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் வினுஷன், விஷானி, லக்ஷானி, றவிசாந் ஆகியோரின் பேரனும் சிவலோகநாதன் (K.R.S. நிறுவனம்), சச்சிதானந்தன் (கனடா), கைலாயபிள்ளை (Rasika property) சிவஞானசுந்தரம் (K.R.S. நிறுவனம்) விக்னேஸ்வரன் (லண்டன்), சிவகுமார் (லண்டன்), ராணி, லக்சுமி ஆகியோரின் மைத்துனரும் மகாதேவா (வைத்திய கலாநிதி - யாழ். போதனா வைத்தியசாலை), தேவராஜா (முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் சகலனும் செல்லம்மா, ஞான பூரண, பூமணி (கொழும்பு), திரவியம், சாரதாதேவி (கனடா), சபா.ஜெயராசா (கல்வியியல் பேராசிரியர்) சபா சிவநேசன் (உரிமையாளர் - அரியதிரவியஇரும்பகம் ஆகியோரது பாசமிகு சகோதரனும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2006) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில், (துரைவீதி).

(சி/47652)(33-16-49)

தகவல்:
க.இராசையா
(K.R.S. நிறுவனம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரிகாவும் மஹிந்தவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாளிகைக்கு வந்துவிட்டார் என்ற தகவல் அமைச்சரவைக் கூட்டத்தில் இருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டது.

அதையடுத்து விரைந்து அமைச்சரவைக் கூட்டம் முடிக்கப்பட்டது. அமைச்சர்கள் உடனடியாக கட்சி அமைப்பாளர்கள் கூட்டத்துக்கு பிரசன்னமாகினர்.

பத்துநிமிட நேரம் கழித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வந்தார். அதையடுத்து மேடையில் முன்னாள் ஜனாதிபதியும் இந்நாள் ஜனாதிபதியும் அருகருகே அமர்ந்து அளவளாவ, கூட்டம் ஆரம்பமானது.

அக்கூட்டத்தில் உரையாற்றியபோது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியதாவது:-

நடக்கப்போகின்ற உள்ளூராட்சித் தேர்தலில் கட்சி அமைப்பாளர்கள் அனைவரும் மும்முரமாக ஈடுபடவேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் ஈடுபட்டமை போல முழுப் பங்களிப்பை வழங்கவேண்டும்.

எந்தக் கட்சியையும் வெளியில் விடத் தேவையில்லை. அனைவரையும் அரவணைத்து, கூட்டமைத்து இந்தத் தேர்தலை எதிர்கொள்வோம்.

நான் ஜனாதிபதியானால் போர் வெடிக்கும் என்றார்கள். நாடு யுத்தத்தில் மூளும் என்றார்கள்.

நான் புலிகளோடு பேசுவேன் என்று யாரும் நம்பவில்லை. என்னோடு பேச புலிகள் முன்வருவார்கள் என்றும் யாரும் நம்பவில்லை.

யுத்தம் தான் வெடிக்கப்போகின்றது என்று ஐ.தே.கவினரும் - ரணில் உட்பட அனைவரும் - கூறி வந்தனர். ஆனால், அவர்கள் அனைவரினதும் எதிர்பார்ப்புகளைப் பொய்யாக்கிப் பேச்சுக்குப் புலிகளை இணங்க வைத்திருக்கிறோம்.

இது ஒரு நல்லதோர் அடி. இதில் முன்நகர்ந்து தீர்வு எனும் வெற்றியை நாம் எட்ட வேண்டும். - என்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. (எ-க)

# புனர்வாழ்வுக்கழக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாய ராஜபக்ஷ.

இப்படி அவர் பி.பி.ஸியின் சிங்கள சேவையான 'சந்தேஷிய'வுக்குத் தெரிவித்தார் என பி.பி.ஸி. தமிழோசை அறிவித்தது.

அவர் தெரிவித்த விடயங்கள் என பி.பி.ஸி. கூறியதாவது:-

இந்தச் சம்பவம் குறித்து எமக்குத் தகவல் வந்ததுமே முழுமையான விசாரணை நடத்த ஜனாதிபதி கடும் உத்தரவு பிறப்பித்துள்ளார். இந்தச் சம்பவத்தில் படையினருக்கு எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.

ஏனெனில் ஜனாதிபதி இதுகுறித்து மிகக் கடுமையான உத்தரவுகளை எற்கனவே பிறப்பித்துள்ளார். நாங்கள் இது குறித்து சிறப்பு விசாரணை நடத்த உத்தரவுகளைப் பிறப்பித்து கொழும்பில் இருந்து சிறப்புப் புலனாய்வுக் குழுவினரை அனுப்பி வைத்துள்ளோம்.

பொலன்னறுவை உயர் பொலீஸ் அதிகாரியும், இது குறித்து சிறப்பு விசாரணையை நடத்தியுள்ளார். யாரும் இது குறித்து எந்தப் பொலீஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யவில்லை. 24 மணிநேரத்தின் பின்னர் மட்டக்களப்பு கண்காணிப்புக் குழு அலுவலகத்துக்குக் கொடுக்கப்பட்ட தகவல்தான் அது குறித்த ஒரேயொரு முறைப்பாடு.

கடைசி சோதனைச் சாவடிக்கு அப்பால் சுமார் நூறு மீற்றர் தொலைவில் நடந்த கடத்தல் சம்பவம் தொடர்பாக அவர்கள் அடுத்த நாள்வரைக் காத்திருந்து மட்டக்களப்புக்குச் சென்று கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் முறையிட்டனர் என்பதை எங்களால் புரிந்து கொள்ளமுடியவில்லை.

அவர்களுக்குப் பொலீஸ் நிலையம் செல்வதில் பயமிருந்திருந்தால் ஒரு நீதிபதியிடம் சென்று முறைப்பாடு செயதிருக்கலாம். எனவே, 24 மணிநேரம் கழித்து முறைப்பாடு வந்துள்ளது.

நாங்கள் சம்பந்தப்பட்ட வாகனச் சாரதியுடனோ அல்லது மற்றவர்களுடனோ தொடர்பு கொண்டு வாக்குமூலம் பெற முயன்றுள்ளோம் எனினும் யாரும் முன்வரவில்லை.

கடத்தப்பட்ட இருவர் இன்று மீண்டு வந்துள்ளனர் எனத் தகவல் வந்துள்ளது.

இதில் எதுவும் உண்மையில்லை. முற்றிலும் திரிக்கப்பட்ட - புனையப்பட்ட - ஒன்று இதுவெனத் தோன்றுகின்றது.

இது சர்வதேச சமூகத்தின் முன் அமைதி முயற்சிக்கு முன்னதாக அரசு தரப்பில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையாக காட்டப்படும் எத்தனமாகும் - என்றார் அவர். (எ-க)

# கடத்தப்பட்டவர்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆயுததாரிகள், ஏனையோரை விடுவித்திருந்தனர்.

மற்றொரு சம்பவத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணியளவில் அதேயிடத்தில் வைத்து வாகனத்தில் சென்ற புனர்வாழ்வுக் கழகத்தின் நான்கு ஊழியர்களும், சாரதியும் ஆயுததாரிகளால் கடத்தப்பட்டனர். கண்கள் கட்டப்பட்ட நிலையில் கூட்டிச் செல்லப்பட்ட இந்த ஐவரில் இருவரே இப்போது விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொடூரமாகத் துன்புறுத்தப்பட்ட இந்த ஊழியர்களில் இருவர் திங்கள் மாலை விடுவிக்கப்பட்டனர் என புனர்வாழ்வுக் கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

கண்களும், கைகளும், வாயும் கட்டப்பட்ட நிலையிலேயே தாங்கள் வனப் பகுதிக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர் என்றும் -

தங்களைப் புகைப்படம் எடுத்த பின்னர் தங்களைத் தப்பிச் செல்லுமாறும், ஊடகங்களுக்கு ஏதேனும் தகவல் வெளியிட்டால் தாங்கள் படுகொலை செய்யப்படுவார்கள் என அவர்கள் எச்சரித்தார்கள் என்றும் -

விடுவிக்கப்பட்ட இருவரும் பின்னர் தெரிவித்தனர்.

# அரச ஒட்டுப்படைகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இடர் ஏற்படுத்துவதை நிறுத்து!

ஸ்ரீலங்காப் படைகளது மனிதத்திற்கு எதிரான கொடூரங்களிலிருந்து தமிழ்மக்களை காப்பதற்காகத் தற்காப்புத் தாக்குதல்களை மேற்கொண்டிருந்த நாம் அவற்றினைக் கடந்த சில நாட்களாக நிறுத்தியுள்ளோம். தமிழீழ விடுதலைப் புலிகளாலும், சர்வதேச சமூகத்தாலும் முன்னெடுக்கப்படும் போர்நிறுத்த உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் குறித்த எமது நல்லெண்ண வெளிப்பாடாகவே எமது தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்தியுள்ளோம். சுழிபுரத்திலும், இருபாலையிலும் படையினர் மீது மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் தாக்குதல்கள் படைத்தரப்பால் வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட புனைவுகளாகும்.

ஆனால், ஸ்ரீலங்கா அரசாங்கமோ, படைத்தரப்போ, தமிழ் தேச விரோத ஒட்டுக்குழுக்களோ தமது கொடூரமிக்க சுற்றிவளைப்புக்கள், தேடுதல்கள், கடத்தல்கள், அச்சுறுத்தல்கள் முதலியவற்றைத் தணிக்கவோ அல்லது நிறுத்தவோ சிறிதளவும் தயாராகவில்லை.

ஒருபுறம் பேச்சுவார்த்தைகளில் அக்கறை காட்டுவது போல் பசப்பிக்கொண்டு, அதே வேளையில் தமிழ் மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகள் தொடரவே செய்கின்றன. இந்த இரட்டைத் தன்மையான நிலைப்பாடுகளைக் கைக்கொண்டு பின்னர் வஞ்சகமாக தமிழ்மக்களை ஏமாற்றுவதே கடந்த காலத்தில் சிங்களப் பேரினவாதத்தின் தந்திரோபாயமாகவிருந்துள்ளது. தேச விடுதலைப் பேராட்டத்தின் ஊடாக புடம் போடப்பட்டு பலமிக்க தளம் கொண்டுள்ள தமிழ் மக்கள் இனியும் ஏமாற்றப்படுவதற்கில்லை. ஏமாற்ற முயல்பவர்களை துவசம் செய்துவிட்டுத் தமது வளமிக்க விடுதலை இலக்கை நோக்கி முன்னேறுவர்.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தினது நயவஞ்சகப் போக்கு தமிழ் மக்களது இயல்பு வாழ்க்கைக்குப் பாதிப்புகள் ஏற்படுவதைப் பொங்கியெழும் மக்கள் படையாகிய நாம் அனுமதிக்கப் போவதில்லை. ஸ்ரீலங்கா பேரினவாதத்தின் அட்டூழியங்களிலிருந்து தமிழ் மக்களைக் காப்பதையே எமது முழு முதல் கடமையாக வரித்துக்கொண்டுள்ள நாம், பொறுமையின் விளிம்புக்கு வந்துள்ளோம்.

தமிழ் மக்களது இயல்பு வாழ்க்கைக்குப் பாதிப்புகளை ஏற்படுத்தும் ஸ்ரீலங்கா படைகளும், ஒட்டுக்குழுக்களும் தமிழ் மக்கள் விரோதச் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும். இல்லையெனில், ஸ்ரீலங்கா படையினரதும், ஒட்டுக்குழுக்களினதும் வன்முறை ஒடுக்குதல்களிலிருந்து தமிழ் மக்களைக் காக்க எதிர் நடவடிக்கைகளை எடுக்க நாம் தயங்கமாட்டோம் என்று முன்னெச்சரிக்கை விடுக்கின்றோம்.

# போர் நிறுத்தக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புனர்வாழ்வுக் கழகத்தின் துணை அமைப்புகளில் ஒன்றைச் சேர்ந்த 5 பணியாளர்கள் வாழைச்சேனையிலிருந்து கிளிநொச்சிக்குப் புறப்பட்டுச் சென்றுகொண்டிருக்கும் போது, வெலிகந்தை அருகே அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டு கடத்தப்பட்டனர் எனக் கூறப்படுகிறது. இது குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் யாரும் தகவல் அளிக்கவில்லை.

புதன் காலைதான் எங்களுக்கு தகவல் தெரிந்தது.

திங்கட்கிழமை நடந்த மற்றொரு சம்பவம் குறித்து விசாரித்துவருகின்றோம். அந்தச் சம்பவத்தில் இருந்து மீண்டு வந்தவர்களில் சிலருடன் சம்பவ இடத்துக்குச் சென்று எமது கண்காணிப்பாளர்கள் பார்த்தார்கள். அவர்கள் அந்தப் பகுதியில் விசாரணைகளை நடத்தி வருகிறார்கள் - என்றார் அவர். (எ-க)

# பேச்சில் பங்குபற்றும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொண்ட விசேட குழு ஒன்றையும் அரசு நிய மித்திருக்கின்றது. சிரேஷ்ட சட்டத்தரணிகளான ஆர்.கே. குணசேகர, எஸ்.எஸ். விஜேரத்தின, டி.பி. மெண்டிஸ், விஜேதாஸ ராஜபக்ஷ, ஜெயம் பதி விக்கிரமரத்ன, எஸ்.எல். குணசேகர போன் றோர் இந்த சட்ட நிபுணர்கள் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

இந்தப் பேச்சுகளில் புலிகள் தரப்பில் பங்குபற்றும் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் கைதேர்ந்த ராஜதந்திர நிபுணர் என அரசுத் தலைமை கருதுகின்றது. ஈழத் தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பான பல்வேறு பேச்சுகளில் - பல்வேறு காலகட்டங்களில் - பங்குபற்றி இவ்விடயங்களில் தேர்ந்த அனுபவசாலியாக விளங்குபவர். இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான சர்வதேச அரசியலில் ஒவ்வொரு விடயத்தையும் நுணுக்கமாக அறிந்து வைத்திருப்பவர்.

தவிரவும், இப்பேச்சுகளில் பங்குபற்றும் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனும் ஏற்கனவே ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணில் ஆகியோரின் அரசுகளுடன் நடைபெற்ற பேச்சுகளில் நேரில் கலந்துகொண்டு இவ்விடயத்தில் நல்ல அனுபவம் பெற்றவர்.

மேலும் தமிழ்ச்செல்வன், புலிகளின் காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் போன்றோர் ஏற்கனவே இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைத்திட்டம் தயாரிப்புத் தொடர்பாக பல நாடுகளுக்கும் விஜயம்செய்து பல்வேறு மூத்த சட்ட நிபுணர்களுடனும், பல்வேறு நாடுகளின் அரசமைப்பு மேதைகளோடும் கலந்துரையாடி இவ்விடயங்களில் நுணுக்கமான அறிவை விருத்தி செய்திருப்பவர்கள். ஆனால், அரசுத் தரப்பில் இப்பேச்சுக் களுக்குப்போக இருக்கின்றவர்கள் இவ்விட யத்தில் புதியவர்களே.

ஆகவே, கைதேர்ந்த புலிகளின் பேச்சுக் குழுவின் இராஜதந்திரத்துக்கு ஈடுகொடுக்கக் கூடியவர்களாக அரசு பேச்சுக்குழுவினரை பயிற்சி கொடுத்துத் தயார் செய்வது அத்தியாவசியமானது என அரசுத் தலைமை கருதுவதாகத் தெரிகின்றது. அதற்காகவே இந்த விசேட பயிற்சிப் பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இப்பேச்சுகளின்போது பாலசிங்கம் தலைமையிலான குழுவினர் சட்டரீதியாகவும், ராஜதந்திர ரீதியாகவும் நகர்த்தக்கூடிய உத்தேச காய்நகர்த்தல்கள் குறித்தும், அத்தகையவற்றுக்குப் பதிலாக மேற்கொள்ளக் கூடிய நகர்த்தல்கள் குறித்தும் அரச பேச்சுக் குழுவினருக்குப் பயிற்சிப் பட்டறையின்போது தகுந்த விளக்கம் கொடுக்கப்படும் என அதன் ஏற்பாட்டாளர் ஒருவர் ''உதயன்' இற்குத் தெரிவித்தார். (எ-க)

# நிமல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தரப்பின் சார்பில் அமைச்சர்களுக்குப் பதிலாக வேறு அரச பிரதிநிதிகளை அனுப்பினால் என்ன என்ற ஒரு யோசனை நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தெரியப்படுத்தப்பட்டதாகவும் -

ஆனால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது நண்பர்களான கணக்காளரையும், கட்டட வடிவமைப்பாளரையும் பேச்சுக்கான அரச பிரதிநிதிகளாக அனுப்பியமைபோன்று தாம் அனுப்ப விரும்பவில்லை என்று குறிப்பிட்ட ஜனாதிபதி ராஜபக்ஷ, உண்மையான அரசுப் பிரதிநிதிகளே நாட்டின் மிக முக்கியமான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து ஆலோசிக்கவும், பேசவும் அனுப்பப்பட வேண்டும் எனத் திட்டவட்டமாகத் தெரிவித்தார் எனவும் - தகவலறிந்த வட்டாரங்கள் 'உதயன்'இற் குத் தெரிவித்தன.

(எ-க)

V.C.M. Institute
A/L 2008
இணைந்த கணிதம்
B. ரவீந்திரன் B.Sc.
ஆரம்பம்: 03.02.2006
வெள்ளி 4 p.m. (ப.நே.)
(4E245)

# தமிழ்க் கூட்டமைப்பினர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தலை செய்யப்படும்வரை -

வடக்கு - கிழக்கில் அரச படைகளினதும் அவர்களுடன் சேர்ந்து இயங்கும் ஒட்டுப் படைகளினதும் தமிழ் மக்கள் மீதான படுகொலை நடவடிக்கைகள் நிறுத்தப்படும்வரை-

இந்தப் போராட்டம் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று நாடாளுமன்றம் காலை 9.30 மணியளவில் சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டாரவின் தலைமையில் கூடியபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா சபாநாயகரின் அனுமதியைப் பெற்று விசேட அறிக்கையொன்றை வெளியிட்டு உரையாற்றினார்.

அவர் தனது உரையில் கூறியதாவது:-

அண்மைக்காலமாக வடக்கு - கிழக்கில் தமிழர்கள் படையினரால் கொல்லப்பட்டும், இம்சைப்படுத்தப்பட்டும் வருகின்றனர். இவற்றைத் தடுத்து நிறுத்துமாறும் இவை தொடர்பாக உரிய விசாரணைகளை நடத்துமாறும் நாம் அரசைக் கோரியிருந்தோம். ஆனால், அதற்கு எந்தப் பலனும் கிடைக்கவில்லை.

இதன் காரணத்தினாலேயே, நாம் ஜனவரி மாதம் 17, 18, 19 ஆகிய திகதிகளில் நாடாளுமன்றில் ஆர்ப்பாட்டம் செய்து - எமது எதிர்ப்பைத் தெரிவித்து - இவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு அரசுக்கு மீண்டும் அழுத்தம் கொடுத்தோம். ஜனாதிபதியையும் சந்தித்துப் பேசினோம்.

இதன் பின்பாவது எமது இந்தப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு ஒன்று கிடைக்கும் என்று நினைத்தோம். ஆனால், நிலைமை மாறவில்லை.

இந்த நிலையில்தான் நோர்வேயின் சமாதானத் தூதர் எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கு வந்தார். புலிகளும் அரசும் ஜெனீவாவில் பேச்சு நடத்த இணக்கம் காணப்பட்டது. இத்தோடாவது இந்த மோசமான நிலைமை முற்றுப்பெற்று விடும் என நாம் நம்பினோம். அதுவும் பொய்யாகிவிட்டது.

சொல்ஹெய்ம் வந்த மறுநாளே 'சுடர் ஒளி' பத்திரிகையின் திருகோணமலை ஊடகவியலாளர் சுகிர்தராஜன் படுகொலை செய்யப்பட்டார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த - சமூக சேவைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த - இளைஞர்கள், யுவதிகள் கடத்தப்பட்டனர்.

அத்தோடு, ஆங்காங்கே இன்னும் பல அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்தப் படுகொலைப் போக்கு இன்னமும் தொடர்ந்து கொண்டே போகின்றது.

இதனையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அனைவரும் 'படுகொலைகளை நிறுத்து!', 'அரசே உரிய நடவடிக்கைகளை எடு!' - என்று கோஷங்களை எழுப்பியவாறு முற்பகல் 10 மணியளவில் சபையைவிட்டு வெளியேறினர். (எ-க)

# படையினர் திடீர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சோதனைக்கும் உட்படுத்தினர். இதனையடுத்து அனர்த்தம் எதுவும் இடம்பெற்றுவிட்டதோ என்று அஞ்சிய பொது மக்கள் உடனடியாகவே வீடுகளுக்குள் முடங்கியதுடன், பெரும் அச்சத்துடன் காணப்பட்டனர் என வடமராட்சிச் செய்திகள் தெரிவித்தன.

A/L 2007
பொருளியல்
வகுப்புகள் மீள ஆரம்பமாக இருப்பதால் எமது நிறுவன மாணவர்கள் 03.02.2006 வெள்ளி பி.ப. 4(N.T) மணிக்குத் தவறாது சமுகம் தரவும்.
புதிய
யுனிவேசல் அக்கடமி

## மரண அறிவித்தல்

### திருமதி இராசையா மனோன்மணி



பருத்தித்துறை, பூதாராய கோயில் ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி இராசையா மனோன்மணி அவர்கள் 31.01.2006 அன்று மாலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் இராசையா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணவேணி, சுந்தரலிங்கம், கமலவேணி, சாரதாவேணி, ஆதிமூலம், தியாகலிங்கம், ஸ்ரீபத்மவேணி, பஞ்சலிங்கம், சேதுலிங்கம், ஈஸ்வரலிங்கம், சத்தியவேணி ஆகியோரது அன்புத்தாயாரும் காலஞ்சென்ற இராஜகுமாரி, கிருஷ்ணபிள்ளை, ஜெயராணி, பத்மாவதி, ஏரம்பமூர்த்தி, சுசிலாதேவி, தங்கத்துரை, ஆதித்தன், மங்களேஸ்வரி, சிரியா காந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் இன்று(02.02.2006) வியாழக்கிழமை காலை 8 மணி முதல் நடைபெற்று முற்பகல் 10 மணிக்கு பூதவுடல் பொறளைக் கனத்தை இந்து மயானத்துக்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 11, களனி கங்கா மில் ரோட்,
மட்டக்குளி.
T.P: 2521212

(அ 47651)
(54-12-49)

தகவல்:
இ.ஈஸ்வரலிங்கம்
(மகன்).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.02.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தாத்தில் தற்கொலைத் தாக்குதல்; 8 பேர் பலி! 30 பேருக்கு மேல் காயம்!!

பக்தாத்,பெப்.2

தற்கொலை குண்டுத் தாக்குதலில் குறைந்தது எண்மர் கொலையுண்டனர்; 30 பேருக்கு மேல் காயமுற்றுள்ளனர்.

பக்தாத் நகரில் இச்சம்பவம் இடம்பெற்றது.

வீதியோரத்தில் கட்டடத் தொழில்களில் சேர்வதற்காகக் காத்துக்கொண்டிருந்தவர்களை குறிவைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டது . தாக்குதலுக்கான காரணம் சரியாகத் தெரியவில்லை. இத்தகவல்களைப் பக்தாத் பொலீஸ் உயர் அதிகாரி பிலால் அலி தெரிவித்தார். பக்தாத்துக்கு அருகில் சன்னி முஸ்லிம் அல்-சமாரீ மசூதிக்குச் சமீபத்தில் இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் அவர் கூறினார்.

சம்பவம் நிகழ்ந்தபொழுது பாதுகாப்புப் படையினர் எவரும் அவ்விடத்தில் இருக்கவில்லை என்றும் - தாக்குதலுக்கான காரணம் தெளிவாக இல்லை என்றும் - அதிகாரிகள் கூறினார்கள்.

''நாங்கள் காலை உணவு அருந்திக் கொண்டிருந்தோம். பெரிய வெடிச் சத்தம் கேட்டு என்ன நடந்ததென்று பார்க்கச் சென்றோம். நடைபாதையில் ஆள்கள் சிதறிக் கிடந்தைக் கண்டோம்'' என்று ஒரு தொழிலாளி கூறினார்.

இராணுவத்துக்கு அல்லது பொலீஸாருக்கு வேலை செய்பவர்கள் அல்லது அவர்களிடம் வேலை தேடிப் போகிறர்களைத் தீவிரவாதிகள் குறிவைத்துத் தாக்கி வருகிறார்கள். இவ்வாறு ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். (ப)

## பாதுகாப்புச் சபையிடம் முறையீட எதிர்ப்பு

தெஹ்ரான்,பெப்.2

ஈரானின் அணுத்திட்டம் குறித்து ஐ.நா. பாதுகாப்புச் சபையிடம் புகார் செய்வது, இந்த விவகாரம் குறித்த இராஜதந்திர நடவடிக்கைகளை முறித்துவிடும் என்று ஈரானிய மூத்த அணுத்திட்ட சமரசப் பேச்சாளரான அலி லாரிஜானி கூறியுள்ளார்.

அமெரிக்கா, ரஷ்யா, சீனா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுக்கிடையே நேற்றுமுன்தினம் லண்டனில் நடந்த கூட்டத்தின் பின்னர் உடன்பாடு காணப்பட்ட நகர்வுக்கு சட்ட அடிப்படை எதுவும் கிடையாது என்று ஈரான் அரசு வாதாடுகிறது.

ஈரான் தொடர்பில் ஓர் அறிக்கையை பாதுகாப்புச் சபைக்கு அனுப்புமாறு தாம் சர்வதேச அணு ஆற்றல் நிறுவனத்தைக் கேட்போம் என்று கூறும் அவர்கள், ஆனால் அவர்களது பதில் நடவடிக்கையை மார்ச் மாதம் வரை ஒத்திப்போடுவோம் என்றும் உறுதி கூறியுள்ளனர்.

சர்வதேச அணு ஆற்றல் நிறுவனத்துடன் ஈரானை மேலும் ஒத்துழைக்கச் செய்யும் நோக்கில் ரஷ்ய மற்றும் சீன இராஜதந்திரிகள் தெஹ்ரானுக்குச் செல்வார்கள் என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார். (ஐ)

## அழிந்துவரும் வல்லூறுகள்

லண்டன்,பெப்.2



தெற்காசியாவில் அண்மைய ஆண்டுகளில் அருகிவரும் வல்லூறு இனத்தின் அழிவைத் தடுப்பதற்கு விஞ்ஞானிகள் ஒரு வழியைப் பரிந்துரைத்துள்ளனர்.

சுகயீனமுற்ற விலங்குகளுக்கு சிகிச்சையளிப்பதற்கு விவசாயிகள் வீக்கத்தைத் தணிக்கும் மருந்தான 'டைக்ளோபெனாக்கை' பயன்படுத்துவதைத் தவிர்த்தால், இந்த வல்லூறு பறவை இனம் முற்றாக அழிந்துபோவதில் இருந்து தவிர்க்கமுடியும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

இந்த வல்லூறுகள் இறந்த விலங்குகளை உண்பதால் அந்த விலங்குகள் ஏற்கனவே இந்த மருந்தின் மூலம் சிகிச்சையளிக்கப்பட்டிருப்பின், அதனால் அந்த விலங்கின் இறைச்சி விசமடைந்து அதன் மூலம் பல்லாயிரக்கணக்கான வல்லூறுகள் இறக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

சில ஆயிரம் வல்லூறுகள் மாத்திரமே தற்போது எஞ்சியுள்ளன.

இந்திய அரசு இந்த 'டைக்ளோபெனாக்' மருந்தைத் தடை செய்துவிட்டு அதற்குப் பதிலாக உரிய மாற்று மருந்தைத் தேடிக்கொள்ள வேண்டும் என்று வன விலங்கு நிபுணர்கள் கோரியுள்ளனர். (ஐ)

## 'அன்புத் தோழி' புதிய தமிழ்ப் படத்தில் போராளி வேடத்தில் திருமாவளவன்

சென்னை,பெப்.2

மதுக்கூர் மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் புதிய படம் 'அன்புத்தோழி'.

இந்தப் படத்தில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றார். அவருடன் பரணி, சௌமியா, சின்னிஜெயந்த், ஆர்.சுந்தர்ராஜன், டி.பி. கஜேந்திரன், பாண்டு, குயிலி உள்ளிட்ட பலர் நடிக்கின்றார்கள்.

முதலில் இந்தப் படத்தில் நடிக்க மறுத்துள்ளார் திருமாவளவன். பின்னர் இது ஈழம் தொடர்பான கதை என்பதாலேயே நடிக்கச் சம்மதித்துள்ளார். இந்தப் படத்தின் படப்பிடிப்புக்கள் வேகமாக நடைபெற்று வருகின்றது.

இந்தப் படத்தைப் பற்றிய சில தகவல்கள்:

இந்தப் படத்தில் திருமாவளவன் போராளியாக நடிக்கின்றார். மரங்கள் நிறைந்த அடர்ந்த காட்டுப்பகுதி ஒன்றில் ஒரு தமிழ்ப் பெண்ணை சிங்கள இளைஞர்கள் பாலியல் பலாத்காரம் செய்யத் துரத்துகிறார்கள். அந்தப் பெண் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அலறியபடியே ஓடுகிறாள். ஒருகட்டத்தில் தடுமாறி கீழே விழுந்து விடுகின்றாள். அப்போது அந் இளைஞர்கள் '' புராணத்தில்தான் பாஞ்சாலியைக் காப்பாற்ற கண்ணன் வருவார் : இங்கே யார் வருவார்? '' என்கிறார்கள். அந்தச் சமயத்தில் '' நான் வருவேன்டா '' என திருமாவளவன் வந்து அந்தப் பெண்ணைக் காப்பாற்றுகின்றார். (ஐ)



## ஜிஹாத் அமைப்பின் முக்கிய தலைவர் இஸ்ரேலியப் படைகளால் கொலை!

ஜெருசலேம்,பெப்.2

பலஸ்தீன ஆயுதக்குழுவான இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பின் தலைவர்களில் ஒருவரையும் அந்த அமைப்பின் உறுப்பினரான ஆயுததாரி ஒருவரையும் இஸ்ரேலியப் படையினர் கொலைசெய்தனர் என்று அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இஸ்லாமிய ஜிஹாத் குழுவின் இராணுவப் பிரிவுத் தலைவர்களில் ஒருவரான நிடால் -அபு-சடா என்பவரே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளார். இவரது ஆயுதக்குழு வடக்கில் மேற்குக் கரைப் பகுதியில் செயற்பட்டு வருகின்றது.

அராபா என்னும் கிராமத்தில் இடம்பெற்ற மோதல் ஒன்றின்போதே இவர் கொல்லப்பட்டார் என்று செய்திகள் வெளியாகியுள்ளது.

வீடு ஒன்றை முற்றுகையிட்டு இஸ்ரேலியப் படையினர் தேடுதல் நடத்த முற்பட்டபோது அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அந்தத் தாக்குதல் முறியடிக்கப்பட்டதாகவும் இஸ்ரேலியப் பேச்சாளர் ஒருவர் இந்தச் சம்பவத்தின் பின் செய்தி வெளியிட்டார்.

இந்த முற்றுகையின் போது இஸ்ரேலிய பொலீஸ் எல்லைப் பாதுகாப்புப் படை வீரர் ஒருவர் காயமடைந்தார் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த வருட இறுதியில் இஸ்ரேலில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலின் பின்னணியில் இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பு சம்பந்தப்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டப்படுகின்றது.

கடந்த டிசெம்பரில் நிட்டன்ஜா எனும் இடத்தில் இடம்பெற்ற தாக்குதலில் ஐந்து பேர்வரை பலியாகிய சம்பவமும் இவர்களால் மேற்கொள்ளப்பட்டதாக சந்தேகிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் மேற்குக்கரை மற்றும் காஸாப் பகுதிகளில் இஸ்லாமிய ஜிஹாத்தின் உறுப்பினர்கள் பலர் இஸ்ரேலியப் படையினரால் கைது செய்யப்பட்டும் கொல்லப்பட்டும் உள்ளனர். (ஐ-ரி)

## இந்தோனேசியாவில் கப்பல் கவிழ்ந்து 30 பேர் சாவு!

ஜகார்த்தா,பெப்.2

கிழக்கு இந்தோனேசியாவில் நடுக் கடலில் கப்பல் கவிழ்ந்ததில் 30 பேர் உயிரிழந்தனர். ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது. 70 பேர் மீட்கப்பட்டனர்.

விபத்துக்கு உள்ளான கப்பல் கிழக்கு நூஸா டெங்காரா மாகாணத் தலைநகர் கூபாங்கில் இருந்து அருகாமையில் உள்ள ரோட் தீவுக்குச் சென்று கொண்டிருந்தபோது கடந்த திங்கட்கிழமை மாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

விபத்து ஏற்பட்டபோது அந்தக் கப்பலில் 82 பயணிகளும் 20 பணியாளர்களும் இருந்ததாக மீட்புக் குழுவைச் சேர்ந்த எரி என்பவர் தெரிவித்தார்.

மீட்புப் பணியில் 3 கடற்படைக் கப்பல்கள் உட்பட 4 கப்பல்கள் ஈடுபடுத்தப்பட்டன. (ஐ)

## சூடுபட்டு வீழ்ந்தபோது காந்தி 'ஹேராம்' என்று சொல்லவில்லை!

### அவரது உதவியாளர் இப்படித் தகவல்

புதுடில்லி,பெப்.2



தேசபிதா மகாத்மா காந்தி கொலைஞன் ஒருவரால் சுடப்பட்டு தரையில் வீழ்ந்தபோது 'ஹேராம்' என்ற வார்த்தையைக் கூறவில்லை.

இப்படி காந்தி சுடப்பட்டபோது அவருக்கு அருகே இருந்த உதவியாளர் வெங்கிட் கல்யாணசுந்தரம் தெரிவித்துள்ளார்.

கொல்லம் காந்திஜி கலாசார நிலையத்தில் காந்தி நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் காந்தியின் உதவியாளர் வெங்கிட் கல்யாணம் கலந்துகொண்டார். முன்னாள் இராணுவ வீரரான இவர் தஞ்சாவூரைச் சேர்ந்தவர்.

வெங்கிட் கல்யாணம் கொல்லத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

டில்லி பிர்லா ஹவுசில் சர்தார் வல்லபாய் படேலிடம் பேசிவிட்டு காந்திஜி 15 நிமிடம் தாமதமாகத்தான் பிரார்த்தனைக் கூட்டத்துக்கு வந்தார். காந்திஜியைப் பார்த்ததும் பொதுமக்கள் எழுந்து நின்று அவருக்கு வழி விட்டனர்.

அவர்களுக்கு இடையே நின்ற கோட்சே துப்பாக்கியால் காந்திஜியைச் சுட்டான் . அப்போது காந்திஜி தளர்ந்த நிலையில் இருந்ததால் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அப்படியே இறந்துவிட்டார்.

'ஹேராம்' என்று அவர் சொல்லியதாக எனக்குத் தெரியவில்லை. காரணம் காந்திஜிக்கு பின்னால்தான் நான் வந்துகொண்டு இருந்தேன் - இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

## நடிகர் செந்தில் அ.தி.மு.கவில் சேர்ந்தார்

சென்னை,பெப்.2

பிரபல நகைச்சுவை நடிகர் செந்தில் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா முன்னிலையில் புதன்கிழமை அ.தி.மு.கவில் சேர்ந்தார்.

முன்னதாக முதலமைச்சரும் அ.தி.மு.க. பொதுச்செயலருமான செல்வி ஜெயலலிதா கடந்த புதன்கிழமை காலை ராயப்பேட்டையிலுள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகம் வந்திருந்தார். அன்று காலை ராயப்பேட்டை வந்த நடிகர் செந்தில், ஜெயலலிதா முன்னிலையில் அ.தி.மு.கவில் தன்னை இணைத்துக்கொண்டார். (ஐ)

## உலக அரங்கில்

## முஸ்லிமாக மதம் மாறுமாறு புஷ்ஷுக்கு அல்-கெய்டா அழைப்பு

டுபாய்,பெப்.2

முஸ்லிமாக மதம் மாறுமாறு அமெரிக்க அதிபர் ஜோர்ச் புஷ்ஷுக்கு, அல்கெய்டா தீவிரவாத இயக்கத்தின் துணைத் தலைவரான அய்மான் அல் ஜவாஹிரி அழைப்பு விடுத்துள்ளார்.

இத்தகவலை அரபுத் தொலைக்காட்சியான 'அல் ஜெஸீரா' தெரிவித்துள்ளது. இது குறித்து அந்தத் தொலைக்காட்சியில் வெளியான செய்தி வருமாறு:-

ஜோர்ஜ் புஷ் முஸ்லிமாக மதம் மாறுமாறு ஜவாஹிரி வேண்டுகோள் விடுத்துள்ளார். இந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டால் புஷ் இஸ்லாமிய சகோதரராக ஏற்றுக்கொள்ளப்படுவார் என்றும் அவர் கூறியுள்ளார். இதன் மூலம் கடவுளின் மன்னிப்பையும் புஷ் பெறுவார் என ஜவாஹிரி கூறியுள்ளார்.



இவ்வாறு அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் பதுங்கியுள்ள அல் கெய்டா தீவிரவாதிகள் மீது அண்மையில் அமெரிக்கப்படைகள் கடும் தாக்குதலை நடத்தின. அப்போது [illegible] தாகக் கூறப்படும் ஜவாஹிரி தப்பிவிட்டதாகத் தகவல் தெரிவித்தன. (ஐ)

## அதிபர் பதவி, இராணுவத் தளபதி இரண்டிலும் முஷாரப் நீடிப்பார்

இஸ்லாமாபாத்,பெப்.2

பாகிஸ்தான் அதிபராகவும் அந்த நாட்டின் இராணுவத் தளபதியாகவும் முஷாரப் தொடர்ந்தும் நீடிப்பார் என்று அவருக்கு மிகவும் நெருக்கமானவரான பஞ்சாப் மாகாண முதல்வர் சௌத்திரி பர்வேஸ் இலாகி தெரிவித்தார்.

பாகிஸ்தானில் 2007ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெறவேண்டும். ஒரு வேளை இது ஒத்திவைக்கப்பட்டு 2008 ஆம் ஆண்டு நடத்தப்படலாம். அரசியல் நிலைமையைப் பொறுத்து பொதுத்தேர்தல் திகதி இறுதிசெய்யப்படும்.

பாகிஸ்தான் அதிபர் பதவி இராணுவத் தளபதி ஆகிய இரண்டிலும் முஷாரப் தற்போது இருந்துவருகிறார். அடுத்த பொதுத் தேர்தல் முடிவடைந்த பிறகும் இவ்விரு பதவிகளிலும் முஷாரப் நீடிப்பார் என்று சௌத்ரி பர்வேஸ் இலாகி தெரிவித்தார்.

பாகிஸ்தான் ஆளும் கட்சியான முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் ஹுசைனின் சகோதரர் இலாகி என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு



அன்புடையீர்,
நிகழும் பார்த்திப வருடம் தைத்திங்கள் 20 ஆம் நாள் இன்று (02.02.2006) வியாழக்கிழமை காலை 7.54 மணி தொடக்கம் 9.06 மணிவரை வரும் உத்தரட்டாதி நட்சத்திரத்துடன் கூடிய சுப முகூர்த்தவேளையில்

## தேவி கருமாரி நகையகம்

எமது புதிய கிளை நிறுவனத்தை இல.66, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் மங்களகரமாக ஆரம்பித்து வைக்கவுள்ளோம். அத்தருணம் வருகைதந்து விழாவினைச் சிறப்பிக்கும் வண்ணம் எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் மிக அன்புடன் அழைக்கின்றோம்.

**தயவுசெய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாகக் கருதவும்.**

இல.66, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உரிமையாளரும், ஊழியர்களும்,
சிறி கருமாரி நகையகம்
இல.205/6, கஸ்தூரியார் வீதி,
ராஜா தியேட்டர் கட்டடம், யாழ்ப்பாணம்.

(சி/47635)(32.26.19.45)



விராட் விஸ்வ பிரம்மனே நம:

# திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் தை 21 ஆம் நாள் (03.02.2006) வெள்ளிக்கிழமை வளர்பிறை ரேவதி நட்சத்திரம் கூடிய 12.30 மணி முதல் 1.30 மணிவரையுள்ள அமிர்த யோக சுபமுகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புதல்வன்
திருநிறை செல்வன்
**சௌந்தர்ராஜன்**
அவர்களுக்கும்

எமது செல்வப் புதல்வி
திருநிறை செல்வி
**பத்மநிதி**
அவர்களுக்கும்

திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் தெய்வத் திருவருளை முன்னிட்டு மாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி கிருஷ்ணமூர்த்தி
30/39, 2ஆம் ஒழுங்கை,
குருமன்காடு, வவுனியா.

(இரு வீட்டார் அழைப்பு)

திரு.திருமதி பரஞ்சோதி
திரு.திருமதி சின்னையா (குடும்பம்)
அம்மன் வீதி, திருநெல்வேலி. (40166)(12-15)

த.மு. காளி கோயில், சங்கானை. (இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)



## குளிரூட்டிய நவீன CAR வாடகைக்கு



- திருமணம் (சோடனையுடன்)
- சுற்றுலா
- விசேட வைபவங்கள்

போன்ற அனைத்துத் தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு:
22, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

T.P.: 0777 - 903090
0777- 246117
077 - 9172730

(45779)(26-19.11)



## காணி விற்பனைக்கு

உடுவில் -மானிப்பாய் வீதி அருகில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : தொலைபேசி இல.
(சி/47630) 0779184436



## வேலையாள்கள் தேவை

சந்நிதி முருகன் வேக்சொப் அன்சேவிஸ் நிலையத்திற்கு சேவிஸ் வேலை செய்வதற்கு அனுபவம் உள்ளவர்களும் பழகவிரும்புவர்களும் தேவை.
- அனுபவம் உள்ள கணனி இயக்குநர் தேவை (பெண்).

தொடர்பு:
இல. 241, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(46243) (வீரமாகாளி அம்மன் அருகில்)



## உடனடி வேலை வாய்ப்பு

(ஒப்பந்த அடிப்படையில்)

பிரபல்யமான கணக்காய்வு நிறுவனத்திற்கு கணக்காய்வு வேலைகளை செய்வதற்கு அனுபவம் வாய்ந்த கணக்காய்வு உத்தியோகத்தர்கள் தேவை. அரச கணக்காய்வு சேவையில் இருந்து ஓய்வுபெற்றோர் விரும்பத்தக்கது. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
(46238) தொலைபேசி : 0773 613285



## இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணம்

### வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2006
### REGISTRATION OF SUPPLIERS - 2006

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் கொங்கிறீற் உற்பத்திப் பகுதிக்கும் யாழ்.அலுவலகத்திற்கும் 2006 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குத் தேவையான பின்வரும் பொருள்களையும் சேவையினையும் வழங்கக்கூடிய வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

**பொருள்கள்**

01. உடைந்த சல்லிக்கல் (Crushed Metal) ½", ¾
02. மணல்
03. மணற்காடு மணல்
04. முறுக்குக் கம்பிகள் (Tore Steel)
05. மென் உருக்குக் கம்பிகள் (M.S.Bars)
06. கட்டுக் கம்பிகள் (Binding Wire)
07. கட்டட வேலைக்கான உபகரணங்கள்
08. மின்சாரப் பொருள்களும் மின்சார உபகரணங்களும்
09. வாகன உதிரிப்பாகங்கள் (Mitsubishi Double Cab வாகனத்திற்குரியவை)
10. ரயர்களும் ரியூப்களும் (Tyre & Tubes)
11. துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்கள்
12. காகிதாதிகளும் அலுவலகப் பாவனைப் பொருள்களும் (Stationary and Office Requisites)
13. அலுவலகத் தளபாடங்கள்
14. கணனிப் பொருள்களும் உதிரிப்பாகங்களும் (Computer Spares)

**சேவை**

01. வாகனம் பழுது பார்த்தல்
02. கணனி பழுது பார்த்தல்

மேற்கூறப்பட்ட பொருள்களையும் சேவையினையும் வழங்குவதற்காக கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்துகொள்ள விரும்புபவர்கள் 17.02.2006 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கத்தக்க வகையில் தங்களின் பெயர், முழுவிலாசம்,வழங்கப்படக் கூடிய பொருள், சேவை விவரம் கொண்ட விண்ணப்பத்தினை பின்வரும் விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

**விநியோக உத்தியோகத்தர்,**
**இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்,**
**வேம்பன் ஒழுங்கை, உரும்பிராய்.**
தொலைபேசி இல. 021 222 2128 (சி/47626)(26.19.45)



கோண்டாவில் அருள்மிகு நெட்டிலைப்பாய்ப் பிள்ளையார் திருக்கோயில்
தெற்குவாசல் அதிசுந்தர திரிதள இராசகோபுர நூதனப் பிரதிஷ்டா

## மகா கும்பாபிஷேகம்

நெட்டிலைப்பாயான் அடியார்களே!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் தை மாதம் 21ஆம் நாள் நாளை (03.02.2006) வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கும் 8.30 மணிக்கும் இடையில் வரும் கும்பலக்ன சுபமுகூர்த்தத்தில் மேற்படி ஆலய தெற்கு வாசலிலே புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள அதிசுந்தர திரிதள இராசகோபுர கும்பாபிஷேகம் நிகழ விநாயகப்பெருமான் திருவருள் பாலித்துள்ளார். அவ்வமயம் அடியார்கள் அனைவரும் இராசகோபுர கும்பாபிஷேகத்தைத் தரிசித்து விநாயகப்பெருமான் அருள் பெற்றுய்வதுடன் மலர் வெளியீட்டிலும் கலந்துகொள்வீர்களாக.

### கும்பாபிஷேக மலர் வெளியீடு
### நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| நேரம்: | காலை 9 மணி |
| ஆசியுரை: | சிவஸ்ரீ நா.அரிகரசுப்பிரமண்யக்குருக்கள் (பிரதமகுரு) |
| வரவேற்புரை: | நா.இ.சர்வேஸ்வரன் அவர்கள்<br>பரிபாலனசபைச் செயலாளர் |
| தலைமை:<br>வெளியீட்டுரை: | பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஸ்ண ஐயர்<br>வாழ்நாள் பேராசிரியர் யாழ்.பல்கலைக்கழகம் |
| ஆய்வுரை: | கவிஞர் சோ.பத்மநாதன் அவர்கள் |
| சிறப்புரை: | பிரசங்கநாவலர்,செஞ்சொற்செல்வர்<br>ஆறு.திருமுருகன் அவர்கள் |
| முதற்பிரதி பெறுபவர்: | திருமதி கலைவாணி குகதாசன் அவர்கள்<br>உபதலைவர் சிவபூமி அறக்கட்டளை |
| ஏற்புரை: | திரு.செல்லப்பா நடராசா அவர்கள்<br>தலைவர், பரிபாலனசபை - மலர் ஆசிரியர் |
| நன்றியுரை: | நல்லாசிரியர் சி.க.ஞானசேகரம் அவர்கள்<br>உபதலைவர், பரிபாலனசபை |

அருள்மிகு நெட்டிலைப்பாய்ப் பிள்ளையார்
திருக்கோயில், கோண்டாவில்.

-பரிபாலனசபை.

(49182)(18-26-19-45)


# ஐ.தே.கவை விட்டு பீரிஸ் போகவேமாட்டார் - ரணில் !

கொழும்பு, பெப்.2

பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டுப் போகவேமாட்டார். ஊடகங்களே இது தொடர்பில் தவறான செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

- இவ்வாறு கூறுகிறார் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க.

கட்சியின் நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்ட ஐ.தே.க. தலைவர், பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தொடர்பில் ஊடகங்களில் பல்வேறு செய்திகள் வெளிவந்தாலும், அவர் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு ஒருபோதும் செல்லமாட்டாரென்று ஆணித்தரமாகக் கூறினார்.

இதேவேளை, எதிர்க்கட்சியின் புதிய கொரடாவாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேராவை நியமிப்பதற்கு ஐ.தே.க நாடாளுமன்றக் குழு நேற்றுமுன்தினம் தனது முழுமையான அங்கீகாரத்தை வழங்கியிருக்கின்றது. (எ-க)

# பண்டத்தரிப்பு இந்துவில் கணனிப் பயிற்சி

வலி.தென்மேற்கு,பெப்.2

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் கடந்த மாதம் முதல் கணனிப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கல்லூரியின் பழைய மாணவர்கள் நான்கு கணனிகளை கல்லூரிக்கு அண்மையில் அன்பளிப்பு செய்திருந்தனர். இதனையடுத்து கணனிக் கற்கை அறை ஒன்று தற்காலிகமாக அமைக்கப்பட்டு அதில் கடந்த மாதம் முதல் மாணவர்களுக்கு கணனிப் பயிற்சி வழங்கப்பட்டு வருவதாக கல்லூரி அதிபர் சி.கந்தசாமி தெரிவித்தார்.

இங்கு நிரந்தரமான கணனிக் கற்கை அறை ஒன்று [illegible] தெரிவிக்கப்படுகின்றது. (ஐ-135)


## JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE
## DIPLOMA IN AGRICULTURE
## விவசாய டிப்ளோமா பயிற்சி நெறி

ஒருவருட கால இலவச விவசாய டிப்ளோமா பயிற்சி நெறிக்கு விவசாயத்தை சுயதொழிலாக மேற்கொள்ள விரும்பும் அல்லது தொழில் வாய்ப்பைத் தேடிக்கொள்ள விரும்பும் கா.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த 17-25 வயதுக்கிடைப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**போதிக்கப்படும் பாடங்கள்:**

விவசாய மூலதத்துவம், பயிரியல், பூங்கனியியல், மிருக பரிபாலனம், பண்ணை முகாமைத்துவம், கமப்பொறியியல் (ஆண்கள்), மனைப் பொருளியல் (பெண்கள்), ஆங்கிலம்.

பயிற்சி நெறிக்காலத்தில் உதவு தொகை, கணனிப் பயிற்சி என்பன வழங்கப்படுவதுடன் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறியில் சேரவிரும்புவோர் 09.02.2006 காலை 9 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறும் நேர் முகத்தேர்வுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகைமைப் பத்திரம், கிராம சேவையாளரின் நற்சான்றிதழ், வேறு இருவரின் நற்சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு: **அதிபர்,**
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்
மருதனார்மடம், சுன்னாகம்
(46209)(26-19-45)



## முதலாம் ஆண்டு நினைவு

மண்ணில்
16 - 08 - 1918



விண்ணில்
02 - 02 - 2005

### திருமதி குமாரசாமி கமலாம்பிகை

அன்று எம்முடன் வாழ்ந்து மறைந்தீர்கள்
இன்று மறைந்தும் எம்முடன் வாழ்கின்றீர்கள்.

பொன்னையா வளவு,
பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.
(45933)(26.19.45)

என்றும் உங்கள் நினைவுடன்:
மக்கள், மருமக்கள், உடன்பிறந்தோர்,
மைத்துனர், பேரமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் தேவை

முல்லைத்தீவு, கிளிநொச்சி, துணுக்காய், வவுனியா வடக்கு, மடு கல்வி வலய பாடசாலைகளில் காணப்படும் கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கான வெற்றிடத்திற்கு ஆசிரியர் வளம் தேவையாக உள்ளது. விஞ்ஞான, கணித பட்டதாரிகளுக்கு பட்டதாரிகளுக்குரிய சம்பளமும், க.பொ.த உயர்தர வகுப்பு விஞ்ஞான, கணிதப்பிரிவில் தேர்ச்சியடைந்தவர்களுக்கு தகுதிகாண் ஆசிரியர்களுக்கான வேதனமும் வழங்கப்படும். கல்வித்தகைமையுடையவர்கள் தங்கள் விண்ணப்பத்தை கல்வித் தகைமைச் சான்றிதழ்களின் பிரதியுடன் 06.02.2006 திங்கட்கிழமைக்கு முன்னதாக *'தமிழீழ கல்விக்கழகம், நடுவப்பணியகம், பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி'* எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

*பொறுப்பாளர்,*
**தமிழீழக் கல்விக்கழகம்,**
*தமிழீழம்.*

(C/47629)

## கல்வியற் கல்லூரி விரிவுரையாளருக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம், பெப். 2

தமிழ் மொழிமூல தேசிய கல்வியியற் கல்லூரிகளின் விரிவுரையாளர்களுக்கான விசேட செயலமர்வு ஹம்பக சியன தேசிய கல்வியியற் கல்லூரியில் எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

'தமிழ் மொழிமூலம் நவீன உளவியல் பிரயோகமும் ஆசிரியரும்' எனும் தலைப்பில் இடம்பெறவுள்ள இந்த விசேட செயலமர்வில் சர்வதேச நிபுணத்துவ ஆலோசகர்கள் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர். இதில் தமிழ் மொழிமூல தேசிய கல்வியியற் கல்லூரிகளின் விரிவுரையாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கல்வியியற் கல்லூரிகளின் பணிப்பாளர் டிலானி அமரசிங்க கேட்டுள்ளார்.

(ஐ- 13)

## மூதூரில் பொலீஸார் மீது சூடு!

கொழும்பு, பெப். 2

திருகோணமலை மூதூர் - பச்சனூர் பகுதி பொலீஸ் காவலரண் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில்பொலீ ஸார்ஒருவர் காயமடைந்துள்ளார். அவர் திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கடந்த திங்களன்று இரவு இடம் பெற்றுள்ளது.

சைக்கிளில் வந்த ஒருவரே இவ்வாறு பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலீஸார் மீது துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டார் எனக்கூறப்படுகின்றது. அந்தச் சமயம் சுமார் இருபது பொலீஸார் அப்பகுதியில் கடமையிலிருந்தனர் எனவும் அவர்கள் பதில் தாக்குதலை மேற்கொண்டபோதும் துப்பாக்கிதாரி தப்பிச்சென்றுள்ளார் எனவும் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | மறைவு | | மலர்வு | மறைவு |
|---|---|---|---|---|
| 26 | 26 | | 07 | 14 |
| 02 | 12 | | 10 | 01 |
| 1927 | 2004 | | 1929 | 2005 |



**க. சின்னத்தம்பி** — திதி:மார்கழிப் பூரணை

**சி. தெய்வானைப்பிள்ளை** — திதி:தைத்திங்கள் அபரபக் கப்பஞ்சமி

*ஐயாவே அம்மாவே ஆண்டொன்று ஆனதம்மா!*
*அவனியை நீங்கள் விட்டு நீங்கி- நாம்*
*என்றும் ஆறவில்லை அழுத கண்ணீர் மறையவில்லை!*
*ஐயா நீங்கள் போய் விழிகள் காயவில்லை!*
*குமுறல் குறையவில்லை எமக்கு யார் துணை என்று*
*இருபதாம் நாள் தைப் பொங்கல் அன்று அம்மா- நீங்களும்*
*போனீர்களே! எங்களைத் தவிக்க விட்டு எங்கு சென்றீர்கள்!*

*பாசமுடன் வளர்த்தீர் - படிப்பறிவு தந்தீர் - பாரினிலே*
*பெற்றவர்கள் கூட மாயமடி - உலகமும்,*
*உங்கள் அன்பும் மாயம் என்று உணர்த்தி சென்றீக்ள்*
*எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எங்கள் மனம் ஆறாது.*

(C/47597)

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

-பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 20 | 13 |
| 09 | 02 |
| 1944 | 2005 |

**அமரர் நடராசா நற்குணசிங்கம்**
(சிவலிங்கம் பத்தர்)
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.
திதி: பஞ்சமி 02.02.2006

பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
எங்களுக்கு நல்வழி காட்டியவரே...!
பெரும் துயர் வந்து ஓராண்டு போனதப்பா...
ஏணியாய் இருந்து எம்மை ஏற்றத்தில்
ஏற்றிவிட்டு எங்கே சென்றீர்கள்?
எங்கள் ஆருயிர் அப்பாவே!
என்றும் உங்கள் நினைவோடு
உங்கள் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கும்...

[46154]

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

**மனைவி, பிள்ளைகள்.**

## யாழ். கல்வியியற் கல்லூரியிலிருந்து முஸ்லிம் மாணவர்கள் அறுவர் பாதுகாப்புக்கருதி வெளியேறினர்

யாழ்ப்பாணம், பெப்.2

குடாநாட்டில் அண்மையில் உருவாகிய பதற்றநிலையை அடுத்து யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்வி பயின்ற முஸ்லிம் மாணவர்கள் அனைவரும் அச்சம் காரணமாக வெளியேறியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டில் இடம்பெற்று வந்த வன்முறைச்சம்பவங்களால் பீதியடைந்திருந்த இந்த மாணவர்கள் விடுமுறையில் வீடு செல்வதாக கல்லூரியின் அதிபருக்கு கடிதம் மூலம் அறிவித்துவிட்டுச் சென்றுள்ளனர். இவ்வாறு ஆறு முஸ்லிம் மாணவர்கள் வெளியேறியுள்ளனர். இவர்கள் கல்வியமைச்சின் பிரதம ஆணையாளர் திருமதி **தர்மலதா**விடம், தாங்கள் குடாநாட்டில் தொடர்ந்தும் கல்விகற்க ஏதுவான சூழல் இல்லை- பாதுகாப்பு இல்லை- என்று முறையிட்டிருக்கின்றனர்.

வேறு கல்வியியற் கல்லூரி ஒன்றில் தமக்கு அனுமதி பெற்றுத்தருமாறும் இவர்கள் கோரியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இவர்களுடைய இடம்மாற்றம் தொடர்பாகக் கல்வி அமைச்சு எதுவித நடவடிக்கைகளையும் இதுவரை மேற்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.


இதேவேளை, விடுமுறையில் சென்ற மாணவர்களில் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த 42 பேர் இன்னும் கல்லூரிக்குத் திரும்பவில்லை என்றும் தெரியவருகிறது.

மட்டக்களப்பு, மலையகம், வவுனியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களே கல்லூரிக்கு இதுவரை சமூகமளிக்கவில்லை என்று கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-13)

## முதலாம் ஆண்டு 10ஆம் ஆண்டு

| மலர்வு | உதிர்வு | மலர்வு | உதிர்வு |
|---|---|---|---|
| 09 | 12 | 22 | 19 |
| 07 | 02 | 01 | 12 |
| 1924 | 2005 | 1927 | 1995 |





அமரர்
**கணபதி கிருஸ்ணபிள்ளை**
(கடவுள்)

திருமதி
**கிருஸ்ணபிள்ளை சின்னம்மா**

திதி: 02.02.2006 (வியாழன்)

தோற்றங்கள் மறைந்தாலும் துயரமோ மாறவில்லை!
காலங்கள் கரைந்தாலும் கவலைகள் ஆறவில்லை!
ஆயிரம் உறவுண்டு ஆனால்
தந்தை தாய் என்ற சொல்லுக்கு யாருமில்லை
உங்கள் ஆத்ம சாந்திக்காக வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

செட்டியவூர்,
தொண்டைமானாறு.

## பொது நிலையினர் தினம் அனுஷ்டிப்பு

குருநகர், பெப். 2

யாழ். மறை மாவட்டத்திலுள்ள அனைத்துப் பங்கிலுமுள்ள பொது நிலையினரால் அண்மையில் பொதுநிலையினர் தினம் கொண்டாடப்பட்டது.

'நற்செய்தியின் வழியில் ஒளியாக உப்பாக' என்றமையப் பொருளில் யாழ். மறை மாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குநர் அருட்திரு. றெஜி இராஜேஸ்வரன் அடிகளார் தலைமையில் கொண்டாடப்பட்ட இந் நிகழ்வில் பெருமளவிலான பொது நிலையினர் கலந்து செபித்தனர்.

(ஐ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## G.A.Q., I[st] in Com யாழ்ப்பாணம்,பேராதனை (வெளிவாரி)

- இக்கற்கை நெறிகளுக்குரிய பதிவுகள் மேற்படி பல்கலைக் கழகங்களினால் கோரப்பட்டுள்ளன.
- புதிய பிரிவுகளுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

குறிப்பு: பேராதனைக்குரிய பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தின் ஊடாக நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

நிர்வாகி:
S.அருள்நங்கை

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,யாழ்ப்பாணம்.

(46177)(32-26-34-45)


## கண்ணீர் அஞ்சலி



31.01.2006 செவ்வாய்க்கிழமை காலமான
யாழ்.மாநகர சபை பிரதம சிறாப்பர்
**சோ.உதயகுமாரன்**
அவர்களின் மரணச்செய்தியைக் கேட்டு பேரதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். இவரது மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சிறாப்பர் பகுதியினர்,
யாழ்.மாநகரசபை.

(46235)(32-34-45)

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியர் திருமதி விமலாதேவி ராஜேந்திரம், முன்னாள் ஆசிரியை நிர்மலாதேவி ரொக்சன் மோகன்குமார் மற்றும் பாடசாலை நலன்விரும்பி வி.சோதிராஜா ஆகியோரின் அன்புத் தாய்
திருமதி **வியாகேசு மங்கையற்கரசி**
அவர்கள் 30.01.2006 அன்று காலமானதையிட்டு அவர் தம் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், ஊழியர் நலன்புரிச் சங்கம்.
யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

(46244)(32-34-45)


## URUMPIRAI KIDS PARK
## உரும்பிராய் கிட்ஸ் பார்க்
(ஆங்கில பாலர் பாடசாலை)

தமிழும் சமயமும் கட்டாயமாகக் கற்பிக்கப்படும்.
சேவை நோக்கில் உரும்பிராய் ஞானவைரவ சுவாமி தேவஸ்தானத்தால் நடத்தப்படும் நவீன பாடசாலை.
சில வெற்றிடங்கள் உள்ளன.

கோப்பாய் வீதி,
உரும்பிராய்.

தலைவர்.

(சி/47619)(32-34-45)



## புதிய பிரிவுகள் ஆரம்பம் 11.02.2006

## Master of Business Administration (MBA)



Available - Accessible - Affordable personalized education

Sikkim Manipal University

The Sikkim Manipal University of Health, Medical and Technological Science was established by an Act of the Sikkim State Legislature in 1995. The University as the approval of University of University of Grants Commission, All India Council for Technical Education, Medical Council of India, Distance Education Council and Nursing Council of India.
Manipal is the nucleus of 53 educational institutions which have an enrollment of 30,000 students. There are 2 Universities, 27 professional colleges. The student body represents 32 countries and the degrees are recognized in over 40 countries.

M B A

Now for the first time you have the opportunity of obtain a prestigious MBA at the only "Authorized" International Study Centre of Sikkim Manipal University in Sri Lanka. The course aims to train graduates in Infrastructure Management Skills required at the higher levels of management. Students will be exposed to the concept of management and the latest Technologies and Strategies required by the relevant industries.

**Eligibility**
Degree or equivalent profe-ssional qualifica-tion. Work experience will be an added advantages

**Duration**
2 years
(Part time)

**FIRST SEMESTER**
Management process and organization behavior
Internet Application
Marketing Management
Human Resource Management
Operation Management
Financial Management
Management Information System

**SECOND SEMESTER**
Strategic Technology Management
Management of Technology transfer, -absorption & IPR
Business Process, Re-Engineering
Enterprise Resource Planning
E-customer Relationship Management & -Supply Chain Management
Conflict Management & Negotiation Skills
History of Management, Case studies

**THIRD SEMESTER**
Infrastructure Management
Fundamentals of Infrastructure Project Finance
Infrastructure Development & Policy Planning
Project Management
Decision Support System

**FOURTH SEMESTER**
Electives *
Project
* HRD + MKT / Finance + MKT / System + MKT

## IIS CITY CAMPUS
# 181, Navalar Road, Jaffna.
T.P. No. : 021 222 8060 / 021 222 [illegible]


## கலந்துரையாடல்

வலி.தென்மேற்கு, பெப்.2

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தின் கலந்துரையாடல் கல்லூரி அதிபர் சி.கந்தசாமி தலைமையில் இன்று வியாழக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (204-135)

## கும்பாபிஷேகங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.2

கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயில் தெற்குவாசல் இராசகோபுர நூதன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகமும் மலர் வெளியீடும் நாளை வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

மகா பூர்ணாகுதி, விசேட தீபாராதனை வேத, தேவார பாராயணம் என்பன இடம்பெற்று இராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து விசேட பூசைகள் இடம்பெற்று விநாயகப் பெருமான் வெளி வீதி உலா வருவார்.

மகாகும்பாபிஷேக மலர் வெளியீடு யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறும்.

நூலின் ஆய்வுரையை கவிஞர் சோ.பத்மநாதனும் ஏற்புரையை மலர் ஆசிரியர் செல்லப்பா நடராசாவும் சிறப்புரையை செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகனும் நிகழ்த்துவர். (ஐ-204)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.2

உடுப்பிட்டி, இமையாணன் கும்பவாழி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய நூதன நவக்கிரக மூர்த்திகள் மகாகும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 6.36 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் புண்ணியாகவாசனம், யாகபூசை, எண்ணெய்க்காப்பு சாத்துதல் போன்றன இடம்பெறும். (ஐ-204)

## கடற்றொழிலாளர் சங்கங்கள் ஒன்றிணைப்பு

மாதகல் பகுதியில் இயங்கும் ஆறு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களையும் ஒருங்கிணைத்து ஒரு சங்கமாக இயங்கச்செய்வதற்கான பொதுக் கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாதகல் புனித தோமையார் ஆலய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

வலி.தென்மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் நடைபெற வுள்ள இக்கூட்டத்தில் யாழ் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், கடற்றொழில் - நீரியல்த்துறை அமைச்சின் யாழ். மாவட்ட உதவிப்பணிப்பாளர், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்துகொள்வர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)


## திருமணப் பொன்விழா வாழ்த்து



**திரு.திருமதி செல்லையா சிவபாக்கியம் தம்பதியர்**
**02.02.2006**

இல்லறத்தில் இனிமையாய்
நல்லறமாய் வாழ்ந்து
பொன்விழாவில் மகிழும் உங்களுக்கு
உளங்கனித்த நல்வாழ்த்துக்கள்.

வாழ்த்துவோர்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதர, சகோதரிகள் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் பொன்விழாக் காணும் திரு.திருமதி செல்லையா சிவபாக்கியம் தம்பதியரை மனதார வாழ்த்துகின்றார்கள்.

(46258) (24)

ஜெயான் (மகன்).



## யாழ் சென்றல் விளையாட்டுக் கழகம்

துடிப்பாட்ட ரசிகர்களான உங்களுடன் செயற்பட விரும்புகின்றோம். நீங்கள் செயற்படவேண்டியது உங்கள் மனதின் துடிப்பாட்ட ஆர்வத்திற்கு தடை விதிக்காமல்.......
ரசியுங்கள் ....... ரசித்துப் பாருங்கள்......... அத்துடன் நின்றுவிடாமல் நண்பர்களுடன் விவாதியுங்கள்!

இவை எல்லாம் எதைப் பற்றி என்றா கேட்கின்றீர்கள்?

பார்க்க வேண்டியது ....... இந்தியா ....... பாகிஸ்தான் இடையேயான கார்கில் யுத்தத்தை அல்ல.
அவர்களுக்கிடையேயான எதிர்வரும் 6ஆம் திகதி தொடக்கம் நடக்கவிருக்கும் ஒருநாள் போட்டித் தொடரை.

உங்களுக்கான விடைகள் அத்தொடரில் உள்ளன.
விடைகளுக்கான கேள்விகள் எங்களிடம் உள்ளன.

**நீங்கள் செய்ய வேண்டியது**

சொற்ப தொகையான ரூபா.10/– இனை மாத்திரம் செலுத்தி கேள்விப் பத்தரங்களை பின்வரும் இடங்களில் பெற்று விடைகளை நிரப்பி குறிப்பிடப்படும் இடத்தில் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் அல்லது குறிப்பிட்ட விலாசத்திற்கு தபால் மூலம் சேர்ப்பித்து அதிஷ்டசாலியாகி பெறுமதியான பணப்பரிசில்களை வெல்லுங்கள்.

முதலாம் பரிசு - ரூபா 2,000
இரண்டாம் பரிசு - ரூபா 1,500
மூன்றாம் பரிசு - ரூபா 1,000

யாழ் ரசிகர்களின் விருப்பத்தேர்வு
உங்களது விருப்பமான அணி மற்றும் வீரர்களையும் தெரிவு செய்து யாழ் ரசிகர்களின் ஆதரவு யாரை தெரிவு செய்கின்றது என்பதையும் அறியுங்கள்.

கேள்விப் பத்திரம் கிடைக்கும் இடங்கள்:-
விடைகளை சேர்க்கவேண்டிய இடம்:-

★அருண் ஸ்போட்ஸ் ஸ்பொட் (Aruns Sports Spot)
இல.255, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(தபால் மூலம் எனின் "யாழ் மத்திய விளையாட்டுக் கழக போட்டிப் புதிர்" என குறிப்பிட்டு அனுப்பவும் அல்லது நேரில் சேர்ப்பிக்கவும்)
★பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்
★யாழ் மத்திய விளையாட்டுக்கழக நிர்வாகசபை அங்கத்தவர்களிடம்

முடிவு திகதி - 09-02-2006

மேலதிக விவரங்களுக்கு.

**செயலாளர்,**
**சென்றல் விளையாட்டுக்கழகம்,**
**29, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**


## மரண அறிவித்தல்

## கார்த்திகேசு சிவக்கொழுந்து



மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சிவக்கொழுந்து அவர்கள் 29.01.2006 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சம்பரம் தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான முருகர் - குஞ்சரம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவகாமியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, வைத்திலிங்கம், தம்பிப்பிள்ளை, நாகம்மா ஆகியோரின் அன்பான சகோதரரும் மற்றும் கிருஸ்ணராசா, லீலாவதி, பாலசுப்பிரமணியம் (இத்தாலி), சாரதா, பாலன் (கனடா), இராசகுமாரி (இத்தாலி), புவனேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற அழகம்மா மற்றும் தேவராசா, பரமேஸ்வரி (இத்தாலி), கிருஸ்ணமூர்த்தி, வனஜா (கனடா), அமரர் ஈஸ்வரமூர்த்தி, ராஜன் (லண்டன்) ஆகியோரின் அருமை மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (02.02.2006) வியாழக் கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் மாதகல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி:
விபுலானந்தர் வீதி,
மாதகல்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(46246)(32-34-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org